# திராவிடநாடு

2 அணா


## புது யுகத் தலைவர்களே! ★

## வருக! வருக!!

ரஷியப் புரட்சிக்குப் பிறகு இப்போதுதான் ரஷியத் தலைவர்கள், இங்கே வருகிறார்கள்.

புல்கானின், க்ருஷ்செவ் இருவரும் தியாகப் பரம்பரையின் தூதர்கள்! புது யுகம் சமைப்பதில் அவர்கள் ஏற்றிருக்கும் பங்கு அதிகம்!!

ஆகவே, அவர்களை வரவேற்பதில் பூரிப்படைகிறது, தி. மு. கழகம். அடிமைத் தளைகள் பூட்டப்பட்டிருக்கும் கரங்களைத் தூக்கி, அவர்களுக்கு வணக்கம் செலுத்துகிறது.

அவர்கள் 'விஜயம்' செய்யும் இடம் சமதர்மச் சோலை அல்ல! சாகசக் கூடாரம்!!

விடுதலை பெற்ற திராவிடத்தின் பொதுவுடைமைப் பூங்காவுக்கு, இதே தலைவர்கள் ஒரு நாள், வரத்தான் போகிறார்கள். அப்போது அவர்களுடைய கரம் குலுக்கிக் களிப்போம்! இன்று, நம் இதயம் வழங்கும் மகிழ்ச்சியையும் வாழ்த்தையும் மட்டும் குவிப்போம்!!

வாழ்க ருஷ்யா! வருக திராவிட நாடு!!

வளர்க பொதுவுடைமை!!!

---

★ கோவைக்கு, வரும் ஞாயிறு அன்று ரஷ்யத் தலைவர்கள் வருகிறார்கள். உதகமண்டலம், மேட்டுப்பாளையம் முதலிய இடங்களுக்குச் சென்றுவிட்டு திங்களன்று சென்னை வருகிறார்கள், 28—11—55 திங்கள் மாலை 7-மணிக்கு சென்னை 'ஐலண்டு' மைதானத்தில் க்ருஷ்செவும், புல்கானினும் பேசுவார்கள்.

# வினேபாவின் விசாரம்!

[அரங்கண்ணல்]

அவன் சென்றது, புலி வேட்டைக்கல்ல! எலி வேட்டைக்கு!! சென்று திரும்புவதற்குள், அமைச்சன் ஓடோடியும் வந்து சேதி சொன்ஞன்—"அரசே! நீங்கள் வேட்டைக்குப் போயிருந்தபோது மகாராணியை ஒரு பாம்பு கடித்துவிட்டது. அரண்மனை வைத்தியரிடம் காட்டினேம். விஷம, தலைக்கு ஏறிஞல் உயிர் போய்விடுமென்று தெரிவித்தார்." தலைக்கு ஏறிஞல்தானே உயிர் போகும்; ஆகவே, அரசன் உடனே உத்தரவிட்டான்–"அமைச்சனே! அந்த விஷம், என் மனைவியின் தலைக்கு ஏறக்கூடாது; ஏனெனில், அவள் உயிர் போய்விடும். ஆகவே, தலையை வெட்டியெடுத்து தனியாக வையும்." அமைச்சன் என்ன செய்வான்? அவன் வாழும் ஊரோ, அநியாயபுரி! அரசன் பெயரோ மூர்க்கசிம்மன்!! இராணியின் தலை, தனியே எடுத்து, பத்திரமாக வைக்கப்பட்டது — விஷம் ஏறிச் சாகாமலிருப்பதற்காக. மூர்க்கசிம்மனுக்கு பாம்பின் மீது கோபம் வரலாயிற்று. எப்படிக் கடிக்கலாம் தன்னுடைய மனைவியை? அதஞல், அந்தப் பாம்பு எங்கே ஓடிஞலும் கொல்லுங்கள், என்று உத்தரவிட்டான். பாம்பு, அங்குமிங்கும் ஓடி, ஒரு வீட்டுக்குள் போய் புகுந்துகொண்டது. அரசன், அந்த வீட்டையே கொளுத்துங்கள்—பாம்பு சாகட்டும், என்று உத்தரவிட்டான்! மூர்க்கசிம்மஞயிற்றே — யாரும், எதிர்வார்த்தை பேசவில்லை. வீடு, எரிந்தது! கொஞ்ச நேரத்துக்கெல்லாம், தீ பரவி, நகர முழுமையுமே நாசம் செய்யத் துவங்கியது. அரசனிடம் அலறியடித்துக்கொண்டு போய்ச் சொல்லினர், "ஏனய்யா! என்ன செய்வது இப்போது? தீயை எப்படி அணைக்கலாம்?" — அரசன் கேட்டான். ஏனெனில், இதுகூடத் தெரியாத அளவுக்கு செல்வமாக வளர்ந்தவன், அவன். அருகிருப்போர், நீரைக்கொண்டு தீயை அணைக்கலாம் என்று தெரிவிக்கவே, ஊருக்கு அருகே இருந்த மாபெரும் ஏரிக்கரையை உடைத்துத் தண்ணீரைப் பாயும்படிச் செய்யுங்கள், என்ருன். நெருப்பு அணைந்தது. ஏரியின் நீரெல்லாம் வீணனதால், பயிர்கள் யாவும் வாடலாயின, அநியாயபுரியில். அதுகேட்ட அரசன், ஊரிலுள்ள மரங்களையெல்லாம் வெட்டி, பயிர்களுக்கு நிழற்பந்தல் அமைக்கச் செய்தான். ஊர் பாழ்! பாழ்! பாழே!

* * *

சிறுவர்களுக்கேற்ற கதை இது! எனினும், இந்த அளவுக்கு 'அந்தக் காலத்திலே' இருந்த அரசர்கள் நினைத்தால், செய்யமுடியும். இட்டதே கட்டளை – எவரும் மீறுதல் ஆகாது, எனறு மன்னவர்களுக்கு எல்லோரும் தலைவணங்கிக் கிடந்த காலம் அது. இதுபோன்ற மூர்க்கசிம்மர்கள் இல்லாததால் பல நாடுகள் தப்பினவேயொழிய அப்படியொருவன் இருந்து இப்படியெல்லாம் செய்திருந்தால், அவனைத் தட்டிக் கேட்க யாராலும் முடிந்திருக்காது. கேட்டிருந்தால், தலை உருளும் கீழே. அவன் படாதபாடு படுத்தப்பட்டிருப்பான்.

மன்னர்களுக்குப் பயந்து அவர்கள் கேட்டபோதெல்லாம் வரி கொடுத்து, அதட்டியதற்கெல்லாம் அஞ்சி நடுங்கி, 'அடா பயலே! கிளம்பு, போருக்கு" என்று அழைத்ததும் ஓடி, தெய்வமாவது நின்று கொல்லும் — அரசன் அன்றே கொல்வானே என்ன செய்வது என்று பயந்து, மக்கள் ஆமைகளாய் ஊமைகளாய் இருந்தது ஒரு காலம். அந்தக் காலம், மாறி, அரசனே மக்கள்முன் பணியவேண்டி வந்தது, மக்களின் கரங்கள் வலுப்பெற்று, மணிமுடிகள் பலவற்றைச் சாய்க்கத் துவங்கியதும், மட மடவெனச் சரிந்தது, மன்னராதிக்கம். இந்திய மண்ணில் வேண்டுமாஞல், குறுநில மன்னர்களை 'சாகசத்தால்' பட்டேல் சாய்த்தார் எனச் சொல்ல முடியுமே தவிர, மேஞடுகளில் மன்னரின் ஆதிக்கத்தை ஒழிக்கச் சிந்தப்பட்ட இரத்தமும், பலியான தியாகிகளும் ஏராளம். மன்னனை மடக்க இங்கிலாந்து ஈடுபட்ட போராட்டங்கள் அநேகம்–பிரான்சு குடியரசாக தூக்கு மேடையிலே நிறுத்தித் துண்டாடிற்று, லூயி தலையை—இரஷ்யப் புரட்சியிலும், ஜார் அப்படியே சாய்க்கப்பட்டான்.

மன்னர்களின் ஆதிக்கம் அழிந்த போது மக்கள் குதூகலப் பண் பாடிஞர்கள்! ஏனெனில், மன்னராட்சி அவ்வளவு கொடுங்கோன்மை நிறைந்ததாயிருந்தது! கோரமும் வெறியும் ஒழிக்கப்பட்டானதும், மக்கள், தங்களுடைய' ஆட்சி மலருமென்று எதிர்பார்த்தனர்—சில இடங்களில், மன்னன் பொம்மையாக்கப்பட்டு, அதிகாரம் யாவும் மக்களின் சபைகளுக்கு வந்தன. பல இடங்களில், மனனர்களே அகற்றப்பட்டு அந்த இடங்களுக்கு மக்களின் தலைவர்கள் வந்தார்கள்.

இங்கிலாந்திலே, மன்னனுக்கு மணிமுடி தரிக்கும் உரிமை உண்டு —ஆஞல் அவன் பார்லிமெண்டுக்

(14-ம் பக்கம் பார்க்க)

ஆண்டுச் சந்தா ரூ. 7

திராவிடநாடு

மலர் 14] 27-11-55 [இதழ் 21

# இளம்பரிதிகாள்!

★

அவர்களை, ஒருக்காலும் மறக்கமுடியாது.

"அண்ணா, வா! தம்பி, வா!" என்று அன்புக் குரல் தரும், அந்த அரிய செல்வங்களை, யாராலும் மறக்க இயலாது.

செல்லுமிடந்தோறும், தித்திப்பு மொழி பேசி, தென்றல் தமிழ்ப்பேணி, குடும்பப் பாசம் செழிக்க வலம் வரும் குல விளக்குகளை, இன்றல்ல--எப்போதும் நாம் மறக்கவொண்ணுது.

அரசியல் தணல் தகிக்க, 'அப்பாடா' என்று பெருமூச்சு விடும்போது, "களைப்பேன் உமக்கு, காளைகள் நாங்கள் இலேயோ? கண் காட்டிடும் திக்கு நோக்கிப் பாயும் புலிகள் நாங்கள் உள்ளோம்" எனும் வீரக் குரல் எழுப்பி, உற்சாக வெள்ளத்தில் திளைக்கவைக்கும் இளம்பரிதிகள், நமக்கன்றி வேறு யாருக்குக் கிடைத்திருக்கிறுர்கள்?

மழலை மாருதவயது-எனினும், கூறுகிறது, திராவிட நாடு திராவிடருக்கே என்று. குடும்பச்சுமை ஏருத பருவம்-இடுக்கண் களைய யாங்களுள்ளோம் உறுதுணை என்கிறுர்கள், எரிமலைகள் போல. அவர்தம் கண்களிலே காணும் புது ஒளியும், பால் வடியும் வதனம் தரும் பைந்தமிழ் உணர்ச்சியும், வாய் திறந்து பேசும்போது உதிரும் உணர்ச்சி வெள்ளமும்-உண்மையில் பெறற்கரிய பேறென்றேகருதுகிறேம். வல்லூறு வட்டமிடும்போது, மணிப் புருக்கள் ஒன்று கூடி எதிர்ப்பதில் ஆச்சரியமில்லை — ஆனுல், அந்த மணிப் புருக்களுக்கு உறு துணையாக தாயின் மடிவிட்டுக் கிளம்பிய குஞ்சுகளும், பேச்சுப் பயிலும் செல்லக்கிளிகளும் தோள் தட்டிக் கிளம்புகின்றன வெனின், சாதாரணமா அது? "சங்கடந் தீர்ந்தின்பமுற வெண்ணிலாவே! ஒரு சங்கதி நீ சொல்ல வேண்டும், வெண்ணிலாவே" என்று பாடிக் காட்டிச் சோகத்தைத் தணிக்க, வேண்டிய அவசியமே ஏற்படாதே. அவர்களின் குரலொலியே, தென்றலாகவும், வெண்ணிலா தரும் இன்பமாகவும் இருக்கும்போது விடுதலை வீரர்களுக்கு என்ன கவலை?

அவர்களையெல்லாம் பார்க்கும் போது, நம்பிக்கை அதிகமாகிறது-நரம்புகள் 'கிண்ணரம்' கொட்டுகின்றன-பொங்கும் ஆனந்தத்தால் பூரிக்கிறது உள்ளம் — புது மனிதர்களே ஆகிறேம் நாம்.

ஏனெனில், மாணவர் குழாம் எந்த விடுதலைப் படையின் முன்னேடும் பிள்ளைகளாக உருவாகிறுர்களோ, அந்த விடுதலைப் படை ஒருபோதும் வீழ்ந்ததில்லை—வெற்றி முரசு கொட்டியிருப்பதாகவே சரிதம் கூறுகிறது. மாவீரன் லெனின், புதுயுகத்தின் குரலாக உருவாகக் காரணமே, ரஷ்ய நாட்டு மாணவர் குழாத்தின் தியாகச் செயலாகும்.

வீரமும் விவேகமும் அமைந்த மாணவர் குழாம்—வேறு யாருக்குமில்லாதபடி, அறிவுப் படையினராகிய நம் பக்கம் அனுதினமும் பவனி வருகிறது—எங்கு சென்ருலும்-எத்திக்கு நோக்கினும்-மாணவர்கள்! திராவிட மாணவர்கள்! இந்த அருங்காட்சியினைக் காணும்போதெல்லாம், "திராவிடமே! உன்னை இனி யாராலும் அழிக்கமுடியாது" என்றே பூரிப்பதுண்டு நாம்.

ஏனெனில், அறிவியக்கம், சீமான்களின் செல்ல மடியைவிட்டு மக்கள் மன்றத்துக்குள் நுழைந்த காலையில் "இருக்குமோ! இறக்குமோ?" என்று கணக்கிட்டோர், பலர். அவர்களின் எண்ணங்களைச் சாகடித்து இயக்கம் ஏறு நடைபோட, பெரும்பாலும் நமக்குற்ற படை வீரர்களாக உருவானவர்கள், மாணவத் தோழர்கள் தான். காடு, மேடு, சிற்றூர், பேரூர் என்று விடுமுறை கிடைத்த போதெல்லாம் மாவட்டங்கள் தோறும் மாணவர் பட்டாளம் சுற்றுப் பிரயாணம் செய்து கொள்கைகளை விளக்கிய நாட்களை, நாம் மறக்க முடியாது. குடந்தையிலே, அவர்கள் ஒன்றுகூடி "அஞ்சேல்! ஆற்றலுடையீர்—உமது பக்கம் நிற்கப் பெரும்படையுள்ளோம்" என்று அவர்கள் பரணி பாடிய அந்த நாளை எண்ணிடும்போது இதயம் இப்பொழுதும் விம்முகிறது.

ஏழை ஆதித்திராவிடர் அத்தோழர்! இருந்ததோ, கல்லூரியில்! அவர், அங்கு குடிப்பதற்கென்று வைத்திருந்த தண்ணீர்ப் பானையில் நீர் மொண்டார், அதற்காக, அவருக்கு அபராதமும் கண்டனமும் அளிக்கப் பட்டது! 'இது அடாது, அக்கிரமம்! என்று கூவியவாறு, அநீதி களைய முன் வந்தனர், மாணவர்கள். அந்த அடிப்படையிலேயே, திராவிட மாணவர்களின் முகாம் ஆரம்பமாயிற்று! திருவாரூர்-அண்ணுமலைநகர்-சேலம் -ஈரோடு-திருச்சி-மதுரை-சென்னை - சிதம்பரம்-தஞ்சை என்று இப்படி, எங்கும் மாணவத் தளபதிகள், மலர்ந்தார்கள்! அந்த மலர்கள், கருகி விடவில்லை—இதோ, மணம் வீசிய படியே பவனி வந்துகொண்டுள்ளார்கள். அவர்களின் செயலையும் திறனையும் நாடு அறியும்!

அத்தகைய வீரர்களின் பரம்பரை, இப்போது எந்தளவுக்கு வளர்ந்திருக்கிறது என்பதையே 19—11—55 அன்று சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற திராவிட மாணவ முன்னேற்றக் கழக மாநாடு எடுத்துக் காட்டிற்று. போதிய அவகாசமோ, அதற்கு வேண்டிய விளம்பரமோ இல்லாதிருந்தும் சென்னை நகரிலுள்ள கல்லூரிகளிலிருந்தும், வெளியூர்களிலிருந்தும் ஏராளமான பிரநிதிகள் கலந்துகொண்டார்கள். அவர்களில் சிலரது சொற்பொழிவினைக் கேட்டபோது, பூரித்து மகிழ்ந்தோம். இப்படை தோற்கின் எப்படைஜெயிக்கும்? — எனும் சொற்றெடருக்கு எடுத்துக்காட்டு, அந்தக் காட்சி!!

மாநாட்டிற்குத் தலைமை வகித்த தோழர் கே. ஏ. மதியழகன், தொடர்ந்து மாணவர் கழகத்தின் பாதுகாவலனுக தானிருக்க விரும்பவில்லையெனக் கூறி, புதியவர்கள் பொறுப்பேற்று நடத்த வேண்டுமெனக் குறிப்பிட்டார். அதன் விளைவாக மாநிலமெங்கும் திராவிட மாணவ முன்னேற்றக் கழகங்களை அமைக்கவும் அது சம்பந்தமான ஆக்கவேலைகளைக் கவனிக்கவும் தோழர்கள் டி. கே. பொன்னுவேலு, உ. பில்லப்பன், சு. ஆறுமுகம், மா. பாண்டியன், தீவிரன், செழியன், சி. டி. தண்டபாணி, வி. சிவப்பிரகாசம், மாறன், தில்லை-வில்லாளன், கு. வளவன், வி. கிருஷ்ணமூர்த்தி, நாகராசன் ஆகியோரடங்கிய அமைப்புக் குழுவும் நிறுவப்பட்டது. இந்தக் குழுவினர், திராவிட மாணவ முன்னேற்றக் கழகங்களை அமைத்து பொலிவும் வலுவும் உள்ள வகையில் செயலாற்றுவார்கள்எனஎதிர்பார்க்கிறேம். தங்கள் வசம் ஒப்படைத்த எந்தக் காரியங்களையும் மாணவர்கள் செவ்வனே செய்யத் தவறியதில்லை — பச்சையப்பன் கல்லூரியினர் ரூ 400 மாநில மாநாட்டுக்கு வழங்கினர் என்ருல், மாணவ மன்றத்திடம் அறிவியக்கத்தின்பாலுள்ள பற்றும் பாசமும் இவ்வளவென்று அளவிட முடியுமோ? அவர்கள், நம்மவர்கள்—நமது தம்பிகள்—குடும்பப் பாசம் கோலோச்ச 'கொள்கை'யைக் கட்டிக் காக்க வளர்ந்துகொண்டிருக்கும், வருங் காலத் தளபதிகள்!!

அத்தகைய அருமைத்தோழர்களின் ஆர்வத்தையும் கொள்கைப் பற்றுதலையும் கண்டு பரவசமடைகிறேம், மனமுவந்து பாராட்டுகிறேம். பிஞ்சுப் பருவத்தினரை, அரசியல் சூருவளிகளில் ஆழ்த்தும் எண்ணம் அறிவியக்

கத்துக்கு என்றும் கிடையாது. பிஞ்சு காய்த்துப் பின்னர் கனிந்து பலருக்குப் பயன்படவேண்டும் — அதுதான் முறையும், சரியான வழியுமாகும். அதிலும், திராவிடமாணவர்களுக்கு, வருங்காலத்தில் மகத்தான பொறுப்பிருக்கிறது. விடுதலை பெறும் திராவிடத்தை வாழ்விக்கவும், வளமாக்கவும் வேண்டியவர்கள் அவர்கள்தான். அதனால், மாணவத் தோழர்கள் அனைவரும், பிறரைவிடத் திறம்படப் படித்து, எடுத்த பாடங்களில் முதல்வராக நின்று, நாமெல்லாம் மகிழும்படிச் செய்தல்வேண்டும். "என் மொழியை விட இன்னொரு மொழி உயர்ந்ததாகத் தோன்றினால்-தம்பி! - மனம் என்ன பாடுபடுகிறது தெரியுமா?" என்று கவி பாரதியார் ஒருமுறை தீட்டினாராம். அதேநிலையில்தான், முதற்பரிசு பெற்றது இவர் — வகுப்பில் முதல்வராக இருப்பது அவர்—என்று சொல்லும்பொழுது, நம்முடைய மனமும்—தம்பிகாள்!—என்ன பாடுபடுகிறது தெரியுமா? என்று தெரிவித்துக்கொள்கிறோம். பல்கலைக் கழகப் பேச்சுப் போட்டியில் திராவிட மாணவ முன்னேற்றக் கழகத் தோழர் ஒருவர் முதன்மையாக வந்தாராம். செய்தி தேனாக இனிக்கிறது எமக்கு. இது போல, தித்திக்கும் தகவல்களை எமக்கு அடிக்கடி அனுப்பும் வகையில் திராவிட மாணவர்கள் அனைவரும் படித்துத் தேர்ச்சியடையவேண்டும்—அவர்களது அண்ணன்மார்கள் ஈடுபட்டிருக்கும் விடுதலைப் போருக்கு ஊக்கமளிக்கும் உதவிப் படையாக மிளிரவேண்டும்-வருங்காலத் தளபதிகளாகத் தங்களைத் தயாரித்துக் கொள்ளவேண்டும்-அதற்கான வகையில் திராவிட மாணவ முன்னேற்றக் கழகம் பணிபுரியவேண்டும். நாமெல்லாம் பெருமையடைய வேண்டும்—என்று அன்போடு தெரிவித்துக்கொள்கிறோம்.

வளர்க, அறிவின் தூதர்கள்! வாழ்க மாணவத் தம்பிகள்!!

★

வாழ்வதையும், மக்கள் கிளர்ச்சி செய்வதையும் கண்டால் என்ன நினைப்பார்கள் ரஷ்யத் தலைவர்கள்? நேரு காட்டிக்கொள்ள முனைந்த தன்னுடைய ஆட்சியின் கவுரவம் காற்றில் பறக்கத்தானே செய்யும்."

"இந்துவுக்கு இந்த எண்ணம், ஏன் ஓய், வந்தது! நேருவை ஏனிப்படி அவமானப்படுத்தவேண்டும்?"

"நேருவை அல்ல ஓய்! கம்யூனிஸ்டுகளைக் கேலி செய்கிறது, ஓய், இப்படிப் படங்களைப் போட்டு —கம்யூனிஸ்டுகளைக் கேலி செய்கிறது. ரஷ்யத் தலைவர்கள் வந்ததால், ஒன்றும் தலைகீழ் மாற்றம் உண்டாகிவிட்டதாக நினைத்துவிடாதீர்கள். எப்போதும் உள்ள இந்தியா அப்படியேத்தானிருக்கிறது — என்று குத்திக் காட்டுகிறது"

★

# சாமாவும்—சீமாவும்!

"என்ன இருந்தாலும் ஓய், நம்ம 'இந்து'வுக்கு இருக்கும் புத்தி சூட்சுமமே, தனி தினுசுதான். 23-ந்தேதி பத்திரிகையைப் பார்த்தீரோ?"

"பார்த்தேன்"

"கடைசிப் பக்கத்தை......?"

"பார்த்தேன்......வழக்கம் போல படம் போட்டிருந்தா..."

"போட்டிருந்த படங்களைக் கவனித்தீரோண்ணேன்...',

"அப்படி என்ன போட்டிருந்தா?"

"போம் ஓய், நுனிப் புல் மேயறதானே உமது சமாச்சாரம். புல்கானின், க்ருஷ்செவ் ஆகியோருக்கு நடைபெற்ற வைபவங்களைப் படம் பிடித்துப் போட்டிருந்தாளே ஓய்..........."

"ஆமாம், போடத்தானே செய்வா? அதிலென்ன சூட்சுமத்தைக் கண்டீர்"

"ஏன் ஓய், அந்தப் படங்களைமட்டும்தானா போட்டிருந்தா......வேறு படம் போடலையோ..."

"போட்டிருந்தா, போட்டிருந்தா"

"என்ன படம் என்று கவனமுள்ளதோ?"

"இல்லை, ஓய்"

"புல்கானினும் க்ருஷ்செவும் ரஷ்யாவுக்குத் தலைவர்கள், ரஷ்யா எப்படிப்பட்ட நாடு. ஏழையும் பணக்காரனும் இல்லாமற் செய்த தேசம். அங்கே ராஜாக்களும் கிடையாது; அதுபோல ரசாபாசத்தில் ஈடுபடும் தொழிலாளர்களும் இல்லை. எல்லோரும் நிம்மதியா வாழ்றா, இல்லையோ?"

"அப்படித்தான் சொல்றா..."

"ஏன் ஓய் இழுக்கிறீர்; அப்படித்தானிருக்கிறது ரஷ்யா. அவர்களுக்கு அளிக்கப்படும் வரவேற்புப் படங்களையும் போட்டு, பக்கத்தில் இந்து இன்னும் என்னென்ன படங்களைப் போட்டிருக்கிறது தெரியுமோ...கோயம்புத்தூரில் நேபாள மன்னருக்கும் அரசிக்கும் அளிக்கப்படும் வரவேற்பு...பெங்களூரில் மைசூர் ராஜப் பிரமுகர், தொழில் நிலையக் கட்டிடத்தைத் திறந்துவைக்கிறார்......"

"அவ்வளவுதானா?"

"பம்பாயில், நேரு சர்க்காரின் முடிவுகளை எதிர்த்து மக்கள் பஸ்களையும் லாரிகளையும் கொளுத்தினார்களே அதையும் படம் எடுத்து பக்கத்தில் பக்கத்தில் போட்டிருக்கிறது, ஓய்! ரஷ்யத் தூதர் 'இந்து'வில் தங்கள் தலைவர்களைப் பற்றி வந்த படங்களைக்கத்தரித்து எடுத்துக் காட்டுகிறார் என்று வைத்துக்கொள்ளும். அப்போது, மன்னருக்கு வரவேற்பு அளிப்பதையும் மகாராஜர்கள் சுகமாக

## நசரத் பேட்டையில்!

120 பேருக்குமேல் அந்தச் சிறு கிராமத்தில் கைதாகியிருக்கிறார்கள், இதுவரை. செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள பூந்தமல்லிக் கருகாமையிலுள்ள நசரத்பேட்டையில், இரண்டு மாதங்களாக நடைபெற்று வருகிறது இந்தத் தொடர்கதை! அமைச்சர் பக்தவச்சலனாரின் மருகர் வரதப்பன் அவர்கள் வசமுள்ள நிலங்களைப் பற்றிய அறப்போராட்டம் அது. ஈடுபட்டு வருவோர், பிரஜா சோஷியலிஸ்டுகள். கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கும் தென்னேரி கிருஷ்ணசாமி உள்ளிட்ட எண்மர், ஒருதினம், அடிதடிக்கும் ஆளாயினராம்! இவ்வளவு தூரம் ஒரு கிளர்ச்சி தொடர்ந்து நடந்து வந்தும், இன்னும் காமராஜர் பார்த்துக்கொண்டிருக்கிறார். ஒரு முடிவுக்கு வரும் அறிகுறி தெரியவில்லை—லோகியா வேறு வரப்போகிறாராம், கிளர்ச்சிக்குத் தலைமைதாங்க. சிறுபொறி, பெருந் தீயானால்தான் அரசு தலையிடும்போலும்!!

### வெற்றி

இந்த ஆண்டு சென்னை பல்கலை கழகத்தார் நடத்திய பல்கலைக் கழகத் தமிழ் பேச்சுப் போட்டியில், புதுக்கோட்டை கல்லூரி மாணவரும், திராவிட மாணவ முன்னேற்றக் கழகத் தோழருமான இரா. நாகராசன், 19—11—55 அன்று, சென்னை மாநிலக் கல்லூரியில், பல்கலைக் கழக முதல் பேச்சாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

# இருளில் ஒளி

சி.என்.அண்ணாதுரை

தொழிலாளர்களின் சங்கங்கள் செழித்தன; பல்வேறு இடங்களிலே, ஓவன் வகுத்த திட்டமாகிய, கூட்டுறவுப் பண்டகசாலைகள் அமைக்கப்பட்டன; தொழிலாளர் இயக்கத்திலே முன்னணியில் இருந்தவர்களில் பெரும்பாலோர், நியூலானர்க் இலட்சியம் கொண்டவர்களாக இருந்தனர். நல்ல சூழ்நிலை. நம்பிக்கைக்கு ஏற்ற சூழ்நிலை, என்று ஓவன் எண்ணி மகிழ்ந்தார்—முழு ஆர்வத்துடன் தொழிலாளர் இயக்கத்திலே பணியாற்றலானார். தங்களுடைய வாழ்வை வளமாக்கும் ஒரே நோக்குடன், தன் சொந்த வாழ்வையும் சுகத்தையும் பொருட்படுத்தாமல், உழைக்கும் உத்தமன் அழைத்தால்; தொழிலாளர்கள் திரண்டு எழாதிருக்க முடியுமா!

கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, சீமான்களாயினர் பலர்; ஓவன், கிடைத்த வாய்ப்பைச் சொந்தத்துக்குப் பயன்படுத்திக்கொண்டு, சுகபோகியாகி இருக்கலாம், ஆலைக்கு அதிபரானார்—செல்வத்தைக் குவித்திருக்கலாம், ஆனால் அவரோ, ஏழைக்குப் புதுவாழ்வு அளிக்கும் திட்டத்தைத் தேடி அலைந்தார். தொழிலாளர் பொருட்டு, சீமான்களின் சீற்றத்தை ஏற்றுக்கொண்டார்; மதவாதிகளின் சாபத்தைச் சகித்துக்கொண்டார். அப்படிப்பட்ட ஓவன் அழைக்கிறார் என்றால், தொழிலாளர்கள் திரண்டுதானே எழுவார்கள். ஓவன், புதியதோர் மகிழ்ச்சிபெறும் வகையில், தொழிலாளர் திரண்டனர்.

1832-ல், ஓவன், புதியதோர் அமைப்பைக் கண்டார் தொழிலாளர்கள், ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்ளவேண்டும்—தாங்கள் உற்பத்தி செய்வதைத்தமக்குள்பண்டமாற்றுச் செய்துகொள்ள வேண்டும், தரகனுக்கும் முதலாளிக்கும் இடம் தரக்கூடாது என்ற தமது இலட்சியத்தை உருவாக்குவதற்காக ஒரு புதிய அமைப்பை ஏற்படுத்தினார்.

'தொழிலாளர் பாங்க்' என்பது அந்த அமைப்பு. இதிலே உறுப்பினர்களாகிறவர்கள் பணத்தை அங்கு சேமித்து வைப்பதில்லை; தங்கள் உற்பத்திப் பண்டங்களைச் சேமித்து வைக்கும் இடம் இது; பண்டமாற்றாக இங்கு ''நோட்டுகள்'' வழங்கப்படும்! பண்டங்களின் விலை, பணத்திலே இருப்பதில்லை—அந்தப் பண்ட உற்பத்திக்காகச் செலவான 'நேரம்'தான், இங்கு குறிக்கப்படும். பத்து ரூபாய்க்கு பட்டுத்துணி கொடு, என்று கேட்பதல்ல, இங்கு முறை; பத்துமணி நேர உழைப்பிலே தயாரான பட்டு, கொடு என்று கேட்கப்படும். பண்டங்களின் மதிப்பு, வேலை நேரத்தால் கணிக்கப்பட்டது. இது இரண்டுமணி நேர நோட்டு, இது பத்துமணி நேர நோட்டு, என்று வழங்கப்படும். அதனை, இந்த அமைப்பிலே உறுப்பினராகும் பண்டகசாலையிலே கொடுத்தால், அந்த நேர அளவுக்குச் சரியான பண்டம் தரப்படும். இந்த நூதன முறையை ஓவன் மிக ஆர்வத்துடன் வகுத்து, அமுல் நடத்தினார். பணம் ஒரு கருவி—அது முதலாளியிடம் சிக்கித் தொழிலாளியைச் சீரழிக்கிறது—உண்மையான மதிப்பு, பணத்திலே இல்லை, உழைப்பிலே இருக்கிறது; எனவே உழைப்பைத்தான் பணத்தைவிட உயர்ந்ததாகக் கருதவேண்டும் என்ற மேலான கருத்தின் மீது அமைப்புக் கட்டப்பட்டது.

இந்த அமைப்பு, ஒரு நூதனக் காட்சியாக மட்டுமே விளங்க முடியும், தொழில் உலகு முழுவதிலும் தொழிலாளர் ஆதிக்கம் ஏற்படுகிற வரையில். எனவே ஓவன் நாட்டிலே இருந்த எல்லா வகையான தொழிற் சங்கங்களையும், ஒரு பெரிய தொழிற் சங்க அணிவகுப்பிலே கொண்டுவரப் பாடுபட்டார் — அவருடைய ஆர்வமிக்க கூட்டுத் தோழர்கள், அரும்பாடு பட்டனர்—அதற்கு முன்பு காணாத அளவுக்குப் பெரிய அணிவகுப்பு அமைந்துவிட்டது, ஆட்சியாளர்களுக்கு அச்சம் ஏற்படும் அளவுக்கு வளர்ந்துவிட்டது.

ஆலைகள், கட்டிட வேலைகள், துறைமுகத் தொழில், எனும் எண்ணற்ற பல தொழில்களிலே இருந்த தொழிலாளர்கள், புது வாழ்வுபெற, புது உலகு அமைக்க ஓவன் அழைக்கிறார், என்ற ஆர்வத்துடன் திரண்டு நின்றனர். அணிவகுப்புக் கண்டு, ஓவன் பெருமை அடைந்தார். பீதி அடைந்த சர்க்காரோ, பலம்கொண்ட மட்டும் தாக்கி, இந்த முயற்சியை முறியடித்தே தீருவதுஎன்று உறுதிகொண்டது.

சங்கம் அமைத்துக்கொள்ளும் உரிமை கிடைத்ததால், தொழிலாளர்கள் திரண்டெழ முடிந்தது. திரண்டெழுந்த தொழிலாளர்களை, ஓவன் போன்ற இலட்சிய ஆவேசம்கொண்டவர்கள், சர்க்காருக்கு எதிர்படையாகக் கிளப்பிவிட்டுவிட்டால், என்ன கதி ஆகும், என்று எண்ணும்போதே சுகபோகிகளின் குலை நடுங்கிற்று. சர்க்கார் துணிந்துவிட்டது; இது பேராபத்து, இதை அழித்தொழிக்க வேண்டும் என்று முனைந்து, சங்கம் அமைப்பது கூடாது, என்று புதுச் சட்டம் விதிக்க விரும்பவில்லை; சட்டப்படி சங்கம் அமைத்தாலும், சர்க்கார் விரும்பினால் எத்தகைய ஆபத்தை விளைவிக்க முடியும் என்பதைக் காட்ட விரும்பினர். சர்க்கார் எடுத்துக்கொண்ட முறை, தொழிலாளர் உலகையே குலுக்கிவிட்டது.

1797ம் ஆண்டில், கப்பலில் வேலை செய்வதிலே விதிக்கப்பட்டிருந்த கடுமையான முறைகளை எதிர்த்து, கடற்படையினர் சிலர்கலகம் செய்தனர்—அந்தக் கலகம் அடக்கப்பட்டுவிட்டது. அதுபோது, ஒரு சட்டம் செய்யப்பட்டது; சங்கம் அமைத்துக்கொள்பவர்கள், சட்டத்துக்கு விரோதமான 'சத்தியம்' வாங்கும் முறையைக் கையாண்டால் தண்டிக்கப்படுவார்கள்

என்பது அந்தச் சட்டம். சங்கத்தில் சேருகிறவர்கள், துரோகம் இழைக்காமலிருப்பதற்காக, சங்க உறுப்பினர்கள், சத்தியம் செய்து தருவது, ஜெபமாலை வைத்துக்கொண்டு சத்தியம் செய்வது, கத்தி வைத்துக்கொண்டு சத்தியம் செய்வது, போன்ற பல வகை உண்டு. இந்த முறை, தொழில் உலகிலே, எழுச்சி வளரவளர, பட்டுக்கொண்டே வந்தது. இந்த முறையைத் தடை செய்யும் சட்டம் ஒன்று 1797-ல் இயற்றப்பட்டிருந்தது; நாடே அதை மறந்துவிட்டிருந்தது; ஆனால் நாடாள்வோருக்குத் தெரியுமல்லவா, என்னென்ன அடக்குமுறைக் கருவிகள் பாசறையில் உள்ளன என்று!

கடற்படையிலே நேரிட்ட கலகம், தொழிலாளர் கிளர்ச்சிகூட அல்ல; புரட்சியுமல்ல! கப்பல் தலைவன் காட்டுமிராண்டித் தனமாக, கலத்தில் வேலை செய்பவர்களைச் சவுக்கால் அடிப்பதுண்டு, உணவு வசதி செய்து தருவதில்லை, ஆண்டுக் கணக்கிலே, கப்பலிலேயே இருக்கச் செய்வான்; இப்படிப்பட்ட கொடுமைகளை எதிர்த்துக் கலகம் நடத்தப்பட்டது.

சம்பவம், பழங்கதையாகிவிட்டது, அப்போது இயற்றிய சட்டம் பரணையில் இருந்தது. அந்தச் சட்டத்தைக் கொண்டு தாக்கி, தொழிற் சங்கங்களை உடைக்கக் கிளம்பிற்று சர்க்கார்!

ஓவன் திரட்டும் தொழிலாளர் அணிவகுப்பிலே இடம் பெறுவதற்காக, உழவர்களும் திரண்டனர்; கிராமப்புறத்திலேயும் ஆர்வத் தீ கிளம்பிற்று. டார்செட், என்ற பகுதியில் உழவர் சங்கம் அமைக்கப்பட்டது. அதற்கு முன்னிருந்து பணியாற்றிய ஆறு பேர்கள், கைது செய்யப்பட்டனர்; அவர்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

உழவர் சங்கம் அமைக்கலாகாதா? சங்கம் அமைப்பதற்கு இருந்து வந்த தடைதான் நீக்கப்பட்டுவிட்டதே? ஏன் இவர்களைக் கைது செய்தனர்? என்று திகைத்தனர், தொழிலாளர்கள்; ஆயுள் தண்டனை தரப்பட்டதும் தொழிலாளர் உலகிலே பெரும் பகுதியினருக்கு, அச்சம் பிடித்தாட்டிற்று.

சங்கம் அமைத்தது சட்டப்படி குற்றமல்ல—ஆனால், சங்கத்தில் உறுப்பினர்களிடம் சட்ட விரோதமான சத்தியம் பெறப்பட்டது—அது கடுமையான குற்றம், என்று கூறி, முப்பத்தேழு ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்ட சட்டத்தால் கொட்டிற்று சர்க்கார்.

அவ்விதமானதொரு சட்டம் இருப்பதையும் அந்த உழவர்கள் அறிந்தவர்களல்ல; கிராமிய முறையிலே, சங்கத்துக்குக் கட்டுப்படவேண்டும் என்பதற்காக, உறுப்பினர்கள் சத்தியம் செய்து தரவேண்டும் என்று நிபந்தனை விதித்தனர்; இதற்காக ஆயுள் தண்டனை!

தொழிலாளர் உலகமே துடிதுடித்தது; செத்துப் போனதாகக் கருதிக்கொண்டிருந்த ஒரு சட்டத்தைக் கொண்டு, சர்க்காரைக் கவிழ்க்கவோ, கலகம் செய்யவோ, சொத்தைக் கொள்ளையிடவோ, முதலாளியைக் கொல்லவோ, அல்ல, தங்கள் பொது உரிமைகளைக் காப்பாற்றிக்கொள்ளச் சங்கம் அமைத்ததற்காக, ஆறு உழவர்களுக்கு ஆயுள் தண்டனை தரும் அளவுக்கு ஒரு சர்க்கார் பயங்கரமான அடக்கு முறையை ஏவுகிறதுஎன்றால், இனி எந்தத் தொழிற்சங்கம்தான் பிழைக்க முடியும், என்ற கிலி பிடித்துக்கொண்டது.

சங்கம் அமைத்துக்கொள்ளும் உரிமையையும் வழங்கி, அமைக்கப்படும் சங்கத்தைச் சாகடிக்க, எந்தெந்தச் சட்டங்களைக் கொண்டு வந்து வீசுவார்களோ என்ற பயம் ஏற்பட்டது.

உழவர் சங்கம் அமைத்த ஜார்ஜ்லவ்லெஸ் என்பவர், செய்த குற்றமெல்லாம், ஆறு அடி உயரத்தில் ஒரு பலகையில் 'சாவு' பொம்மை எழுதச் சொல்லி, அதன் எதிரே நின்று, உறுப்பினர்கள், சங்கத்துக்குஉண்மையாக நடந்துகொள்வதாகச் சத்தியம் செய்துதரச் சொன்னதுதான்.

இது மிகப்பெரிய குற்றம் — ஆயுள் தண்டனை — அதுவும் இங்கிலாந்தில் அல்ல—தீவுக்கு அனுப்பப்படுவர், என்று வில்லியம் என்ற ஜட்ஜ் தீர்ப்பளித்தார்.

சட்டப்படி தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது, என்று குறைகூறத் துணிந்தவர்களுக்குக் கூறிவிட்டார்; உள்நாட்டு மந்திரியாக இருந்த மெல்போரன் பிரபு.

நாட்டிலே சோகம் கப்பிக்கொண்டது; நாடாள்வோர் அது தேவைதான், இல்லை என்றால், தொழிலாளர்களின் கொட்டம் அடங்காது என்று மமதையுடன் கூறினர். மன்னிக்கக் கோரி மனுக்கள் வந்தன; புறக்கணிக்கப்பட்டன; நாலு இலட்சம் மக்கள், மன்னிப்புக் கோரும் மனுவில் கையொப்பமிட்டிருந்தனர்; ஆனால்சில நூறு முதலாளிகளின் பாராட்டுதலைப் பெறுவதற்குத்தான் சர்க்கார் முனைந்தது. ஆறு உழவர்களும், மார்ச் 18ந் தேதி குற்றக் கூண்டிலே நிறுத்தப்பட்டனர், 30-ந் தேதி, அவர்களை ஏற்றிக்கொண்டு, கப்பல் கிளம்பிவிட்டது, தீவுக்கு.

சின்னாட்கள் வரையிலே நாடு கொதித்தது; கண்டனக் கூட்டங்கள் நடந்தன; ஆனால் போலீஸ் அமுல் நடத்திற்று.

மெல்போரன் பிரபுவிடம் 'மனு' தருவதற்காக ஒரு மகத்தான தொழிலாளர் ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டது. சீமான்கள் சார்பிலே வாதாடிய 'டைம்ஸ்' பத்திரிகை, இந்த ஊர்வலம் பெரிய ஆபத்தை உண்டாக்கும், சர்க்கார், கடுமையான நடவடிக்கை எடுத்து, இதைத் தடுத்துவிட வேண்டும், என்று பன்னிப் பன்னி எழுதிற்று. மெல்போரன் பிரபுவும் -தக்க முன்னேற்பாடுகளைச் செய்யலானார். இந்த ஊர்வலத்தை அடக்குவதற்கென்றே தனிப் போலீஸ்காரர்கள் திரட்டப்பட்டனர்; இலண்டனில் படை பவனி வந்தது; சமயம் வாய்த்தால், சுட்டுத் தள்ளுவதற்குச் சர்க்கார் தயாராகிவிட்டது.

ஏப்ரல் 21ம் நாள், மகத்தான ஊர்வலம், இலண்டன் சென்றது.

பல்வேறு தொழிலாளர்களும் இதிலேகலந்துகொண்டனர் ஆறுஉழவர்களை விடுதலை செய்யும்படி முழக்கமிட்ட வண்ணம், அந்த மாபெரும் ஊர்வலம், சென்றது.

பலாத்காரம் நேரிடாதபடி தடுத்துக்கொள்ளவும், போலீசுடன் மோதுதல் ஏற்படாதபடி பாதுகாத்துக்கொள்ளவும், ஒரு திடலை வாடகை கொடுத்துப் பெற்று, அதிலே ஊர்வலத்தினர் அணிவகுத்து நின்றனர்.

நாட்டு மக்களின் கொதிப்பை எடுத்துக் காட்டவும், தீவுக்குத் துரத்தப்பட்ட ஆறு உழவர்களிடம், எல்லாவிதமான தொழிலாளர்களுக்கும் பச்சாதாபம் இருப்பதைக் காட்டவும், ஒவ்வொரு தொழிற்சங்கமும் தத்தமது கொடிகளைத் தாங்கிக்கொண்டு, ஊர்வலத்தில் கலந்துகொண்டன. முப்பத்து மூன்று வகையான கொடிகள் பறந்தன! ஊர்வலத்தினர் அனைவரும், சிவப்பு நாடாவை அடையாளச் சின்னமாக அணிந்துகொண்டிருந்தனர். தொழிலாளரின் சக்தியைக் குறைத்து மதிப்பிடும் 'டைம்ஸ்' பத்திரிகையே, ஊர்வலத்தில் குறைந்தது முப்பதாயிரம் மக்கள் இருந்தனர் என்று எழுதிற்று. மெல்போரன் பிரபு, ஊர்வலத்தினர் கொண்டுவந்த மனுவைப் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்.

இந்த மகத்தான கண்டன ஊர்வலத்தை ராபர்ட் ஓவனும் அவரு

---

## தி. மு. க. செங்கற்பட்டு மாவட்டம்

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. உறுப்பினர் கூட்டம் வரும் 27-11-55 ஞாயிறு காலை 9 மணிக்கு காஞ்சிபுரத்தில் திராவிட நாடு நிலையத்தில் கூடும். அது சமயம் கீழ்க்கண்ட பொருள்கள் ஆய்வுக்கு வரும். உறுப்பினர்கள் தவறாது வர வேண்டுகிறேன்.

பொருள்கள்:— 1. பொதுக்குழுவுக்கு ஒரு பிரதிநிதி தேர்ந்தெடுத்தல்.
2. மாநில மாநாட்டு நிதி.

அன்பன்,
K. T. S. மணி
செ. மா. தி. மு. க. செயலாளன்.

டைய நண்பர்களும், கட்டுப்பாடாக நடத்திச் சென்று, தொழிலாளர் களின் எழுச்சியை ஆட்சியாளர்கள் அறியச் செய்தனர்.

ஆனால், தொழிலாளர் உலகம் துவக்கத்திலே துடித்தது, கண்டித்தது என்றாலும் பயம்கொண்டு விட்டது.

சத்தியம் வாங்கும் முறையைப் பல தொழிற்சங்கங்கள் நீக்கிவிட்டனஎன்ன செய்தால் சர்க்காருடையசீற்றத்துக்கு ஆளாகாதிருக்கலாம் என்று, சங்கங்கள்யோசிக்கலாயின, ஏன் நமக்கு இந்த ஆபத்து என்று தொழிலாளர் களில் ஒரு பகுதியினர் கூறலாயினர்.

சர்க்காரின் போக்கைப் புரிந்து கொண்ட முதலாளிகள் ஆங்காங்கே தொழிலாளர்களைக் கொட்டலாயினர்; சங்கங்களைச் சரியச்செய்யும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டனர்.

ஏன் என்று கேட்கும் தொழிலாளி விரட்டப்படுகிறான்! சங்கத்தில் சேருபவனை முதலாளி சந்தேகக் கண் கொண்டு பார்க்கிறார்! போலீசோ, வட்டமிட்டபடி இருக்கிறது.

ராபர்ட் ஓவன் திரட்டிய அணி வகுப்பைப் பிளந்தெறியும் வேலையைச் சர்க்கார் முழுமூச்சுடன் செய்கிறது; என் செய்வார் ஓவன்! வயதோ அதிகமாகிறது! இலட்சியமோ தங்கமானது.—நாடு பக்குவம் பெறவில்லை — சர்க்காரோ இரும்புக் கரத்தால் தாக்குகிறது; மனம் உடையலாயிற்று.

பல இடங்களில் முதலாளிகளோ தாக்கலாயினர்; வேலை நிறுத்தங்கள் ஏற்படலாயின.

கடைசி முயற்சியாக, பொது வேலை நிறுத்தம் செய்வது என்று கருதினர் ராபர்ட் ஓவன். அந்த முயற்சி போதுமான பலன் தரவில்லை. இருபதாயிரம் தொழிலாளர்களுக்கு வேலை போயிற்று! அணிவகுப்பு, இவர்களைக் காப்பாற்றும் பெரும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று; தாங்க முடியாத சுமை, அணிவகுப்பு முறிந்தது; அதைவிட அதிகமாக ஓவனுடைய உள்ளம் முறியலாயிற்று.

பணமுடை, சங்கங்களுக்குள் பூசல், சங்கங்களிலேயே குழப்பம், சிற்சில இடங்களில் பலாத்காரம் என்று, நோய் வளரலாயிற்று. நொடித்துப் போயிருக்கும் இந்த நேரத்தில் புதிதாக எந்தச் சங்கமும் வேலைநிறுத்தம் செய்யக்கூடாது என்றுஅணிவகுப்புக் கேட்டுக்கொண்டது. அதற்குக் கட்டுப்பட மறுத்து, சில சங்கங்கள், அணிவகுப்பிலிருந்தே விலகிக்கொண்டன. பத்து லட்சம் உறுப்பினர்களைக் கொண்டிருந்த அந்த அணிவகுப்பு, சர்க்காரும் முதலாளிகளும் கூடிக் கொண்டு தாக்கியதன்பலனாக, சின்னா பின்னமாகிவிட்டது. ராபர்ட் ஓவன் அணிவகுப்புச் சிதறிவிட்டது அறிந்து வருந்தினர் எனினும் வாளா இருக்கவில்லை, நிலைமையை நாட்டு மக்களுக்கு எடுத்துரைப்போம், நல்லாட்சி தேவை என்பதை வலியுறுத்துவோம், அடக்கு முறைப் புயல் சிறிது ஓயட்டும், பிறகு பார்ப்போம் என்று எண்ணினர்—ஆனால் தொழிலாளர் உலகம், அவரைவிட்டு, விலகலாயிற்று. ராபர்ட் ஓவன் கடைசி வரையில் தன் புதுக்கருத்துக்களை எடுத்துரைக்கும் பணியைவிடவில்லை; அவருடைய தூய நோக்கத்தையும் உழைப்பின் பெருமையையும் நாடு மறந்துவிடவுமில்லை. இருளில் ஒளி தர முயன்றார்—போதுமான அளவு, இருளை அடியோடு விரட்டக்கூடிய அளவு ஒளி கிடைக்கவில்லை — காலம் துணை செய்யவில்லை, ஆனால் அவர் எடுத்துக்கொண்ட முயற்சி வீண் போகவில்லை—வயலுக்கு இட்ட உரமாயிற்று.

அவருக்குப் பிறகு, இங்கிலாந்தில் மட்டுமல்ல, பிரான்சு, ஜெர்மனி, ஐரோப்பிய நாடுகளிலேயும், தொழிலாளர் இயக்கங்களை நடாத்தியவர்கள், அவர் தந்த இலட்சியத்தை மறக்கவில்லை-முறையை மட்டுமே மாற்றினர். அவர் துவக்கிய கூட்டுறவுச் சமூகம் எனும் இலட்சியத்துக்கு, புதுப்புது ஆதரவாளர்கள் கிளம்பினர்; அவர் விரும்பிய வளம், தோழமை, வளரப் பாடுபட்டனர்.

ஓவன், இருளில் ஒளிதர முயன்றார் —இருள் அப்போதும் அடியோடு போய்விடவில்லை, ஆனால் ஒளிக் கதிரின் அளவு வளருகிறது! ஓவன், துவக்கினர், அறப்போர் நடைபெற்ற வண்ணமிருக்கிறது. இருளில் ஒளி தர முயன்ற ராபர்ட் ஓவன், புதுச் சமுதாயம், லானர்க், மக்களுக்குப் பாடம், போன்ற சிறந்த ஏடுகள் தீட்டியதுடன், நாடெங்கும் செய்த பிரசாரம், அளவிலும் திறத்திலும் மகத்தானது.

எடுபிடியாக வாழ்க்கையைத் துவக்கிய ராபர்ட் ஓவன், தொழிலாளர்கள் முகத்திலே புன்னகையும், மனதிலே நம்பிக்கையும் மலரச்செய்த மாபெரும் தலைவராகத் திகழ்ந்தார். அவர் ஊட்டிய ஆர்வத்தால், உந்தப்பட்டவர்கள் பலர், இலட்சியத்துக்காகப் பணியாற்றினர். கூட்டுறவுப் பண்டகசாலை முறையை உலகுக்கே தந்தவர், ஓவன் என்று கூறலாம்.

ராக்டேல் என்ற இடத்தில், இருபத்தெட்டு ஏழை நெசவாளிகள், இருபத்தெட்டுப் பவுன் மூலதனத்துடன், கூட்டுறவுப் பண்டகசாலை துவக்கி, அது தழைத்தது, என்றால், ஓவன், நாட்டிலே தழைக்கச்செய்த ஆர்வம். தான் அதற்குக் காரணம்.

தொழிலாளர் உலகிலே எழுச்சியும் விழிப்பும், புது வாழ்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையும் ஏற்படச் செய்த பெருமை சாமான்யமானதல்ல. இதற்காக ஓவன் உழைத்தது, சாதாரண முறையில் அல்ல. ஆயிரத்து ஐந்நூறு சொற்பொழிவுகள்,இரண்டாயிரம்கட்டுரைகள்—ஓவன் தொழிலாளர் சார்பில் காணிக்கையாக்கினர்.

எல்லாவற்றையும்விட இருள் சூழ்ந்திருந்த நேரத்தில், தொழிலாளர் உலகுக்கு, ஒளி தந்த பெருமை, ராபர்ட் ஓவனைச்சாரும், அவர் தந்த ஒளியும் வளருகிறது, இருளும் அகன்று கொண்டிருக்கிறது.

**முற்றும்.**

## அவர்கள் சொன்னது!

பிரபல ஆங்கிலக் கவிஞர் மில்டன் கண்களை இழந்து குருடான பிறகு, ஒருத்தியை மணந்தார். வாழ்வில், ஊன்றுகோல் போல விளங்குவாள் என்று கருதப்பட்ட அவளோ, பெரிய கொடுமைக்காரியாக விளங்கினாள்! அதனால், கவிஞர் படாத பாடுபட்டார். ஒருநாள் அவரைச் சந்திக்க வந்திருந்தபிரபு ஒருவர் மில்டனின், கவிதைகளைப் பற்றிப் புகழ்ந்துவிட்டு, "அடடா உங்கள் கவிதைகளில் மட்டுமல்ல் அழகு சுடர்விடுகிறது; இல்லத்தின் எந்தப் பகுதியும் அழகு மயமாகவே காட்சியளிக்கிறது. உங்கள் மனைவிகூட ஒரு அழகுக் களஞ்சியம்! ஆடிடும் ரோஜா என்றால் ரோஜா தான்!!" என்றாராம், வர்ணனையுடன். அதைக் கேட்ட மில்டன் வேதனை கலந்த சிரிப்பொன்றை வீசிக்கொண்டே சொன்னாராம். "நான் குருடனானதால் அவளது அழகைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் என்மேலே படுகிறதெல்லாம், முட்கள் தான்" என்பதாக.

சாக்கரடீசைப்பற்றி, எல்லோரும் அறிவோம்! அவருக்கு வாய்த்த மனைவியும், ஒரு அடங்காப்பிடாரி. ஒருநாள் அவளுடைய அட்டகாசம் தாங்கமுடியாமல், வெளியேபோய் உட்கார்ந்தாராம். அப்போதும் விடவில்லை, அவர் மனைவி! மாடியிலிருந்த அழுக்கு நீர்த்தொட்டியை எடுத்து, அவர் மீது கவிழ்த்தாள். வேதனையுடன், சொன்னாராம் சாக்கரடீஸ், "கொஞ்ச நேரத்துக்கு முன்பு இடி இடித்தது, இப்போது மழை பெய்கிறது!" என்பதாக,

# இரு கடிதங்கள்!

"நான் ஒரு அசல் தமிழன். தென் ஆப்பிரிக்காவில் உள்ள நெட்டால் என்ற மாகாணத் தலைநகராக விளங்கும் பீட்டர் மாரிட்ஸ்பர்க் என்ற ஊரில் பிறந்தேன். என் தகப்பனார் திருவண்ணமலையில் பிறந்தவர். பால்யப் பருவத்திலே அவர் மோரீஷில் வந்து குடியேறினர். அங்கு சிலகாலம் தங்கிப் பிறகு நெட்டாலுக்கு வந்து வியாபாரம் செய்து வாழ்ந்து வந்தார். நான் இப்பொழுது பாரிஸ்டர் தொழில் செய்கிறேன். எங்கள் ஊரில் தமிழ்ப்பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. எனக்குத் தமிழ் எழுதப் படிக்கத் தெரியும். ஹிந்தி பாஷையும் கொஞ்சம் தெரியும்.

தென் ஆப்பிரிக்காவில் மொத்தம் இந்திய ஜனத்தொகை மூன்று இலட்சம். இதில் தமிழர்கள்தான் அதிகம். மொத்தத்தில் எல்லோரும் ஒற்றுமைதான். ஆனால், வட இந்தியர்கள் முக்கியமாய் குஜராத்தியர்கள் தமிழர்கள்மீது கொஞ்சம் நிறத் துவேஷமாக இருப்பதைச் சில சமயங்களில் காணலாம். இது வருந்தத்தக்கது. தமிழர்கள் குஜராத்தியர்களுக்கு முன்பே குடியேறினவர்கள். குஜராத்திகள் காந்திஜி வந்தபிறகு வந்தவர்கள். வியாபாரம் செய்து செழிப்பாக இருக்கிறார்கள். வெள்ளையர்கள் நிறத் துவேஷம் காட்டுவதை இந்தியா வெறுக்கிறது; காந்திஜியும் வெறுத்தார். நேருஜியும் கண்டிக்கிறார். இப்படியிருக்க, இந்தியர்களாகிய குஜராத்தியர்கள் ஏதோ தாங்கள் கொஞ்சம் வெள்ளை நிறமாக இருப்பதால், கருப்பு நிறமாயிருக்கும் இந்தியர்களாகிய தமிழர்களிடம் நிறத் துவேஷம் காட்டுவது சரியல்ல"

*

நா. இராமச்சந்திரன் என்பவர், தீட்டியுள்ள கடிதம் இது! திராவிட முன்னேற்றக்கழகமோ அவர் என்று சந்தேகப்படுவீர்கள் — அல்ல! அல்ல!! அவர் கடிதம் தீட்டியதே, 'கல்கி'யில். 'தாயகம் கண்டேன்!' எனும் தலைப்பிட்டு, இவ்விதம் தீட்டியுள்ளார்.

நிறத் துவேஷம் காட்டுகிறார்களாம், யார்? ஆபிரிகாவிலுள்ள வெள்ளையர்களல்ல! குஜராத்திகள்!

காந்தி கண்டித்தார்—நேரு கண்டிக்கிறார் — இருந்தும், ஏன் நிறத் துவேஷம் காட்டப்படுகிறது? எனக் கேட்கிறார், தோழர்!

தமிழர்கள்தான் அதிகமாம், குடியேறியோரில்.

ஆனால் செழிப்புடன் இருப்போர் வடவர்களாம்.

அதையும் குறிப்பிட்டுவிட்டு, ஆனால் தமிழர்கள் கொஞ்சம் கருப்பாக இருப்பதால் அவர்கள் மீது துவேஷம் காட்டுவது, அடுக்குமா! நியாயமா என்று கேட்கிறார்.

ஆபிரிகாவில் மட்டுமல்ல, பர்மா, மலேயா போன்ற இடங்களிலும் எங்கெங்கு வடவர்களிருக்கிறார்களோ, அங்கெல்லாம் இது போன்றே 'துவேஷம்' காட்டப்படுவதாக, அடிக்கடி கேள்விப்படுகிறோம்.

ஆனால், நேரு பண்டிதரோ, குஜராத்தும், தமிழகமும் இந்தியாவுக்குள்ளிருப்பது! இரு இடத்தில் வாழும் மக்களும் இந்தியர்களே! ஏது, பேதம்?—எனக் கர்ச்சிக்கிறார்.

பேதம், இதோ! என்கிறார், இராமச்சந்திரன்.

"ஓ! ஓ! ஆபிரிக்காவிலா? இந்தியாவைவிட்டு வெகுதூரம்போயிருப்பதால் அப்படி இருக்கிறார்கள் போலும். எல்லாம் போகப்போகச் சரியாய்விடும்" என்று சொல்ல முனையலாம் தேசிய நண்பர்கள்.

அவர்களது பார்வைக்கு மற்றுமோர் கடிதம்—"இந்து" இதழில் தீட்டியிருக்கிறார், சி. எஸ். சிவராமன் என்பவர்.

அவர் ஆபிரிகாவிலிருப்பவரல்ல, புதுடில்லியில் இருப்பவர், அவர் தீட்டுகிறார்,

"இங்கிருப்போருக்கு தென்னாட்டிலுள்ள முக்கியமான நான்கு மொழிகள் எவை எவை என்பதுகூடத் தெரியவில்லை. 'மதராசி' என்று ஒரு மொழியிருப்பதாக அவர்கள் கருதிக்கொண்டிருக்கிறார்கள். 1951ல் மத்ய பிரதேசத்தார் எடுத்த மக்கள் தொகை கணக்கெடுப்பைப் பார்வையிட்டபோது, 'மதராசி' என்று மொழிக் கெதிராகக்குறிப்பிட்டிருப்பதைக்கண்டு ஆச்சரியமும் திகைப்பும் அடைந்தேன்."

'சென்சஸ்' எடுக்கும் பணிகளில், திறமையுள்ள கல்வியாளரைத்தான் அரசாங்கத்தார் நியமிக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்குக்கூட தெற்கே இன்னின்ன மொழிகள் உள்ளன என்று தெரியவில்லை! மதராஸ்—மதராஸி—என்றே கருதிக் கொண்டிருக்கிறார்கள்!!

இதனை, வேதனையோடு குறிப்பிடுகிறார் சிவராம். ஒரு பாகத்திலிருக்கும் மொழிகூட இன்னதெனத் தெரியவில்லை! இங்கிலையில் இந்தியா ஒரே நாடாம்—அனைவரும் இந்தியர்களாம்.

எவ்வளவுதான் பூசி மெழுகினலும், கூச்சலிட்டாலும், வடக்குக்கும் தெற்குக்குமுள்ள பேதங்களை சமம் செய்துவிடமுடியாது.

அங்கிருப்போர் நம்மைப்பற்றித் தெளிவாக அறிவார்கள் எனவும் எதிர்பார்க்க இயலாது.

தமிழரும், கேரளரும், ஆந்திரரும், கன்னடியரும் சந்திக்கும்போது உண்டாகிற சகோதர பாசம்—குஜராத்தியும் கேரளரும் சந்திக்கும்போதோ, பஞ்சாபியும் தமிழரும் உரையாடும் போதோ ஏற்படுவதென்பது இயலாது.

பசுவையும் புலியையும் போட்டு அடைக்கும் முயற்சி என்று இதனல்தான் சொல்லுகிறோம். ஏதோ பாபம் — வளமிருந்த நாடிருந்தும் வாழமுடியாத காரணத்தால் ஆபிரிக்காபோன்ற வெளிநாடுகள் நோக்கிச் செல்லுகிறார்கள் — அங்கு வெள்ளையன் தொல்லை ஒருபுறம்! இந்தக் கொள்ளையரின் தொல்லை இன்னொரு புறம்!! நிறத் துவேஷம் காட்டி நிந்திக்கிறார்களாம்.

ஆபிரிக்காவில் அப்படி! இந்தியாவுக்குள்ளேயோ, நாம் யாரென்பது குறித்தும் அறிய முடியாத நிலை!

ஒரே இந்தியாவாம்! அனைவரும் இந்தியராம்! அகண்ட பூபாகம்—அதற்குள் ஏராளமான தாய்மொழிகள்—வெறியர் ஒருபக்கம், அறிஞர் தம் குழு ஒரு பக்கம்—அனைவரையும் போட்டு அடக்க விரும்புகிறது டில்லி.

வீண்முயற்சி, என்கிறோம்—நாம், அதனையே, விளக்குகின்றன இந்தக் கடிதங்கள்!!

★

# இந்த 'நீரோ'க்கள்!

சிரித்தார்களாம்!

குலுங்கக் குலுங்கச் சிரித்தார்களாம்!!

மேசைமேல் தட்டி ஆரவாரத்துடன் சிரித்தார்களாம்!!!

*

டில்லி மாநகரிலே, வீணடம்பரத்திற்கோர் எடுத்துக்காட்டாய் விளங்கும் 'இராஜ்ய சபை' எனும் மேல் சபையிலே, நேரு பண்டிதர் உட்பட எல்லோரும் சிரித்தார்களாம்! சிரிப்பு ஓய, ஒரு நிமிடம் ஆயிற்றாம்!

அவ்வளவு நகைச்சுவைக்குரிய விஷயம் என்ன தெரியுமா?

பதினைந்து பேர் பலி
**300** பேருக்குக் காயம்
**8** பஸ்கள் தீக்கிரை
வீடுகள் தாக்கப்பட்டன
**250** பேர் கைது
செருப்படியும்! கல்லடியும்!

இந்தச் சம்பவம் குறித்து பூபேஷ் குப்தா எனும் உறுப்பினர், காரசாரமாகப் பேசினாராம். அப்போது, நமது அருமந்த சர்வபள்ளி இராதா கிருஷ்ணன் குறுக்குக் கேள்வியொன்று பூட்ட, 'கொல்' என்று சிரித்தார்களாம்! 'இந்து' ஏடு, மிக விளக்கமாகவே தருகிறது செய்தியை—நேரு பண்டிதரும் விழுந்து விழுந்து சிரித்தாராம்!!

இரு வாரங்களுக்கு முன்புதான் நேரு பண்டிதர், பஞ்சாப் மாநிலம் சென்றபோது, படுகொலை செய்தானே டயர் எனும் வெள்ளையன், அந்த ஜாலியன்வாலாபாக்கைப் பார்வையிட்டு வந்ததாகப் படித்தோம். அப்போது வெடித்த துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்த இடங்களையெல்லாம் அப்படியே வைத்திருக்கிறார்களாம்—தியாகிகள் கமிட்டியினர், வெள்ளையன் கொடுமையைப் பாரீர் என்று உலகுக்குக் காட்ட!

அதைக் கண்டு திரும்பிய நேரு பண்டிதர், பம்பாய் மாநகரத்துக்கு இவ்வாரம் சென்று பார்த்தால் தெரியும்—எத்தனையெத்தனை இடங்கள் துளைக்கப்பட்டுள்ளன எனும் சோகசம்பவம். ஏனெனில், 22ந் தேதி அன்று முழுவதும் விட்டு விட்டு, ஓரிடம் என்று இல்லாது, துப்பாக்கிகள் முழங்கிக்கொண்டே இருந்திருக்கின்றன.

வேதனை கலந்த இந்த விபரீதம் குறித்து, மேல்சபையின் கவனத்துக்குக் கொண்டுவந்திருக்கிறார் பூபேஷ் குப்தா. வேதாந்த விளக்கங்களைக் கொடுப்பதோடில்லாது, அரசியல் அந்தஸ்தும் பெற்று, மேல்சபையின் தலைவராகவும் அமர்ந்துள்ள சர்வபள்ளி இராதாகிருஷ்ணன், குறுக்குக் கேள்வி போட்டு, 'ஹாஸ்யரசம்' பரிமளிக்கச் செய்தாராம்!

"பாரீர், படுகொலையாளர்களே—இதுதானா, அஹிம்சாமூர்த்திகளின் பண்பு; இருதயத்திலிருந்து வடியும் இரத்தத்தைப் பாரீர்! அதிகாரத்திலிருப்போர்தான் கட்டளையிட்டார்கள் என்றால் உங்களுக்கு எங்கே போயிற்று புத்தி? மரணப் படுக்கையில் கிடக்கும் இவன், உன்னுடைய சகோதரர்களில் ஒருவன் தானே? இவனுடைய உயிர் துடிதுடித்துக்கொண்டு போவதை உங்கள் கண்களால் பாருங்கள்" என்று குண்டடிக்கு ஆளாகி, குருதியில் நனைந்த ஒருவரின் உடலை, 'கிட்ட வராதே! சுடுவோம்' என்று மிரட்டிய போலீஸ் அதிகாரிகளிடம், 'சுடு எங்களையும் சுடு' என்று கூவிய வண்ணம் கொண்டுபோய்க் காட்டினராம், பம்பாயில்! அந்த மனிதன் கொஞ்சநேரம் கழித்து, கண்களை மூடிவிட்டான்.

படிக்கும்போது, நிகழ்ச்சி பம்பாயில் நடைபெற்றது என்றபோதிலும், இதயம் துடிக்கிறது-பதினைந்து பேராமே மாண்டது; ஐயோ, பதினைந்து குடும்பங்களன்றோ பரதவிக்கும் இனி.

அங்கு நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டோர் டாடாவுமல்ல, பிர்லாவுமல்ல, தொழிலாளர்கள். பம்பாய் நகரத்தை, மராட்டிய மண்டிலத்துடன் இணைக்காமல் தனி மாகாணமாக்குவதென்று காங்கிரஸ் காரியக் கமிட்டி செய்த முடிவை ஆட்சேபிப்பதற்காக முற்போக்குக்கட்சிகள் யாவும் கண்டன நாள் அனுஷ்டித்தன. அந்த நாளை, கண்ணீர் வடிக்கும் நாளாக்கிவிட்டது, காங்கிரசாட்சி.

பதினைந்து தொழிலாளிகள் படுகொலை எனின்—அவர்களின் இல்லத்திலே, இனி இருள் சூழும் என்பதுதானே பொருள்? அவர்தம் மனைவி மக்கள், தாய் தந்தையரின் கதி என்ன இனிமேல்? 'சர்வபள்ளிகள்,' சஞ்சலமில்லாத இடத்துக்குப் போய், சந்தனக் கட்டிலும், குளிரும் வெயிலும் நுழையாத அறையும், கோலாகலமான வாழ்வும் பெற்றுவிட்டார்கள்—நாடாள்பவர்கள் எனும் பெயரில்! அவர்கள் ஈட்டிடும் பொருள், இன்னும் ஏழேழ் தலைமுறைக்குவரும். ஆனால், இந்த ஏழைத் தொழிலாளர்தம் குடும்பங்களுக்கு ஆதரவு காட்ட யார் இருக்கிறார்கள்? அதை நினைத்து, 'ஐயோ' என்று அலறவேண்டியவர்—குறுக்குக் கேள்வி போட்டாராம்—கோலோச்சும் நேரு உள்பட், எல்லோரும் சிரித்தார்களாம்!

பிரச்னையை சபையின் கவனத்துக்குக் கொண்டுவந்த **பூபேஷ்குப்தா** காங்கிரஸ்காரரல்ல—அவர்களுக்கு இதுபோன்ற சமயங்களில், மனம் துடித்தாலும் மரக்கட்டையாக வேண்டுமென்பதுதானே, கட்சிக் கட்டுப்பாடு! — அவர் காங்கிரஸ்காரரல்ல என்பதே சிரிப்புக்கு முதல் காரணம்! இரண்டாவது அவர் ஒரு கம்யூனிஸ்டு—ஆகவேதான் சர்வபள்ளி குறுக்குக் கேள்வி வீசியதும் 'கொல்' என்று சிரித்திருக்கிறார்கள்.

இரஷ்யக் கம்யூனிஸ்டுத் தலைவர் க்ரூஷ்செவ் – இரஷ்யாவின் அரசியலை நடத்தும் கட்சியின் முதல்வர் என்பதால், புல்கானினோடு சேர்த்து, இங்கு வரவேற்பும் வாழ்த்தும் வழங்கப்படுகிறார். புல்கானினுக்கு எந்த அளவுக்கு மரியாதைகள் செய்யப்படுகின்றனவோ அந்த அளவுக்கு க்ரூஷ்செவுக்கும் அளிக்கப்படவேண்டுமென்பது நேரு பண்டிதரின் தாக்கீது. ஆனால், அதே கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவர்—ஆனால் இந்தியாவில் பிறந்துவிட்டார் என்பதற்காக பூபேஷ் குப்தாவை எள்ளி நகையாடி ஏளனம் செய்திருக்கிறார்கள், **டில்லி** பீடத்தார்.

தோழர் குப்தா, ஆட்சியாளரின் காட்டரசுப் போக்கைக் கண்டிக்கக்கூட இல்லை—இதுபோன்ற சம்பவங்கள் நிகழ்ந்தமைக்காக வருத்தம் தெரிவித்துவிட்டு — அமைதியான முறையில் கிளர்ச்சி நடக்காமல் போய்விட்டதற்காக வருந்தி— "எங்களைப் பொறுத்தவரையில் பஸ்களைக் கொளுத்துவதுபோன்ற சம்பவங்கள் நிகழாமல் பார்த்துக் கொள்வோம்'' என்று உறுதி மொழி அளிப்பதுபோல் பேசியுள்ளார். எதையெடுத்தாலும் கம்யூனிஸ்டுகள் காரணமென்று 'கதை'ப்பார்களே காங்கிரஸ்காரர்கள்—அது இல்லையென்று அறிவிப்போம்—இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் இன்றைய கொள்கையை எடுத்து விளக்குவோம் எனும் நல்லெண்ணத்துடன், குப்தா இவ்வண்ணம் வெளியிட்டுள்ளார். பூபேஷ் குப்தா, சாதாரண கம்யூனிஸ்டு உறுப்பினரல்ல; மேல்சபையில் கம்யூனிஸ்டுகளின் தலைவரே, அவர்தான!

அவர் கூற்றை, சிரம் வணங்கி ஏற்கும் நல்வாழ்வு விரும்பும் அரசு. ஆனல், அன்பர் இராதாகிருஷ்ணனே, வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதுபோலச் சொன்னாராம், "அப்படியா ஐயா? பார்த்துக்கொள்வோம் என்று சொன்னீர்களே, அப்படியென்றால், பஸ் கொளுத்துதல்போன்ற காரியங்களுக்கு நீங்கள் பொறுப்பாளிகளா யிருந்தீர்களா?'' என்பதாக.

இதயத்திலிருந்து வந்த வாக்கு ஏளனம் செய்யப்பட்டிருக்கிறதே! நேருபண்டிதருமன்றோ, மேசையைத் தட்டிச் சிரித்தாராம்.

பதினைந்துபேர் பலி—300-பேருக்குக் குண்டடி — பம்பாயே, அல்லாடுகிறது — இந்தச் சமயத்தில், 'ரோமாபுரி எரிய எரிய வீணை வாசித்த நீரோ மன்னன் வேண்டுமானல்' கவலையற்றிருக்க முடியுமே தவிர — நேரு போன்றவர்களா, நகைச்சுவையை ரசிக்கும் கட்டத்திலிருக்க வேண்டும். இரத்தக் கண்ணீர் வடித்திருக்கவேண்டும் — இல்லையெனின் ஓடோடியும் பம்பாய் மாநகரம் சென்றிருக்கவேண்டும். பம்பாயே அல்லாடுகிறது என்றால் பார்லிமெண்டா பெரிது? உத்தமர் காந்தி உயிரோடிருந்தால், இப்படி கிண்டலையும் கேலியையும் ரசித்துக் கொண்டாயிருந்திருப்பார்.

புகை கிளம்புகிறது, வீதிகளில்—இரத்தம் கொட்டிய சின்னங்கள் தென்படுகின்றன — செய்திகளோ திகைப்பையூட்டிடும் அளவில் குவிகிறது — மூவராக இருந்த எண்ணிக்கை பதினைந்தாகிவிட்டது-காயமடைந்த 300-ல் இன்னும் எத்தனை பிணமாகுமோ என்று கவலை தெரிவிக்கிறார்கள் அதிகாரிகள் — இப்படியொரு சந்தர்ப்பத்தில் பம்பாய் முதலமைச்சர் மொரார்ஜி தேசாய் என்ன செய்தார் தெரியுமோ? கிளர்ச்சிக்காரர்களுக்கு உறுதிமொழிகள் அளித்திருப்பார்—மராட்டியத்தில்தானே, பம்பாயிருக்கவேண்டும். பார்க்கலாம் ஆலோசித்து என வேண்டுகோள் விடுத்திருப்பார்—கலவரம் அடங்க சமாதான வழிகளையெல்லாம் துருவித் துருவி ஆராய்ந்திருப்பார், என்றுதானே எண்ணுகிறீர்கள்? மொரார்ஜி, யார், சாதாரணமான வரா? இப்படியெல்லாம் செய்தால், என்ன ஆகும், அந்தஸ்து — பெருமை. அதனல், ஊரே ரணகளமாகக் காட்சி அளித்தபோது, அதிகாரிகளைக் கூப்பிட்டனுப்பி அவர்களுடன் ஆலோசனை செய்துகொண்டிருந்தாராம். அதுவும், எத்தகைய அதிகாரிகள்? இராணுவ அதிகாரிகள்.

ராணுவ அதிகாரிகளிடம் என்ன பேசியிருக்கமுடியும் — கொண்டு வாருங்கள் படைகளை, நீட்டுங்கள் துப்பாக்கிகளை, 'மெஷின் கன்'னை இழுத்து வாருங்கள். ஆகாய விமானம் ரோந்துவரட்டும் — இப்படித்தானே, பேசியிருக்கமுடியும்? ஒரு பொதுஜனத் தலைவர், அஹிம்சா மார்க்கபோதகரின் சீடர், பிரச்னையைச் சமாளிக்க, ராணுவ அதிகாரிகளை அழைத்திருக்கிறார். என்ன கல்மனம் இருந்திருக்கவேண்டும்? மக்களைப்பற்றி எத்தகைய மனோபாவம் இருக்கிறது அவருக்கு. ராணுவத்தைக் காட்டி தன்னுடைய 'கித்தாப்பை' நிலைநாட்டுவது மொராஜிக்குப் பெரிதாயிற்றே ஒழிய — நிலைமையைச் சமாதானமாகத் தீர்க்கும், எண்ணம் அரும்பவில்லை. எவ்வளவு விபரீதக் காட்சி, எத்தகைய விந்தையான கட்டம்.

முதலமைச்சரின் நிலை இதுவெனில், பம்பாய் மாகாண காங்கிரஸ் தலைவர் எஸ். கே. பட்டில் என்ன அறிக்கை விடுத்துள்ளார் தெரியுமோ? "மராட்டியர்களே! பம்பாய், மராட்டிய மாகாணத்துடன் இருக்க வேண்டுமென்கிறீர்களா? சரி! இது பற்றிக் கலந்தாலோசிப்போம்—வேண்டுமெனின் வாக்கெடுப்புகூட எடுப்போம். இப்போது அமைதியாயிருங்கள். இப்படி அடித்துக்கொண்டு சாவதால், நம்முடைய சகோதரர்கள்தானே சாகிறார்கள். இது அறமா? நான் சொல்லுவதைக் கேட்காவிடில், இதோ நான் இருக்கிறேன்—என்னைப் பிணமாக்கி விட்டுப் பிறகு உங்கள் ரகளைகளைச் செய்யுங்கள்'' என்றுதானே அறிக்கைவிட்டிருக்க வேண்டும்? அதுதானே காந்தியின்சீடர் செய்ய வேண்டிய காரியம்.

பட்டீலுக்கு அதெல்லாம் கவனத்துக்கு வரவில்லை — தேசாயை விட ஒரு படி மிஞ்சுகிறார்—காங்கிரசின் சார்பில் 'ஹோம் கார்டு'கள் இருப்பது போதவில்லையாம். இது போன்ற சந்தர்ப்பங்களைச் சமாளிக்க இன்னும் 40000 பேர்களைச் சேர்க்கப்போகிறாராம்!

பட்டீலுக்குப் பிரச்னையின் உட்பொருள் தெரியவில்லை என்பதல்ல அர்த்தம் — ஆயினும், 'ஹிட்லர்' பாணியில் அறிவிக்கிறார், "ஏ! மாற்றுக்கட்சிக்காரர்களே! உங்களை என்ன செய்வேன் தெரியுமா? இன்னும் 40,000 பேர்களைச் சேர்த்து உங்கள் மேல் ஏவிவிடுவேன்! கபர்தார்!'' என்று எச்சரிக்கிறார்.

'ஹோம்கார்டு'களிருந்தால் நிலைமையைச் சமாளிப்பார்களாம்—அதாவது போலீசும் ராணுவமும் செய்யாத காரியத்தைச் சாதிக்குமாம்! போலீசாராவது கொஞ்சம் அஞ்சவேண்டும்—உத்தரவு வரட்டும் என்று காத்திருக்க வேண்டும் —பட்டீலின் படைக்கோ அதெல்லாம் தேவையில்லையல்லவா? பிடி அவனை! தாக்கு உடனே! விடாதே அவன் வீட்டை!—என்று, எது வேண்டுமானலும் செய்யலாமல்லவா.

* * *

மாண்டனரே பதினைந்துபேர், அவர்களைப்பற்றி சர்வபள்ளியோ, பட்டீலோ, தேசாயோ, பண்டிதரோ, எதுவும் கூறவில்லை.

ஒருவர் நகைச்சுவை யூட்டுகிறார்! எச்சரிக்கிறார், இன்னெருவர்! இராணுவத்தைக் காட்டி மிரட்டுகிறார் முதலமைச்சர்! கைதட்டிச் சிரிக்கிறார், நேரு பண்டிதர்! அழகான சுயராஜ்யம்—அற்புதமான தலைவர்கள்—அவர்களுக்கென ஒரு கொடி—அதிலே, அசோகசக்கரம் —ஐயோ, காங்கிரசே! அநியாய மாய்க் கெட்டாயே!!

★

# ★ பெருமைக்குரிய பாராட்டு விழா ★

அரசு அளிக்கும் விருதுகளை விட, மக்கள் மன்றம் அளிக்கும் வாழ்த்துக்கும் பாராட்டுக்குமுள்ள பொலிவே அலாதியானது.

வேண்டியவர்கள் என்பதால் பட்டங்களையும், பதவிகளையும் அளிக்கக்கூடும், அரசாங்கம்! அதில் ஆடம்பரம் இருக்கக்கூடும், ஆனால் அதைவிட மிகச் சிறப்பானது, மக்கள் மன்றம் உவந்தளிக்கும் வாழ்த்துக்கள்.

சுதந்திரோதய ஆட்சியில், கவிஞரையும் கலையுலகத்தினரையும் பாராட்டுவதாகச் சொல்லி யார் யாருக்கோ, எதெதோ செய்கின்றனர்! கூழாங் கற்களுக்கு மவுசும், ஒளி வீசும் வைரங்களுக்கு கதவடைப்பும் தரப்பட்டு வருகிறது, டில்லி ஆட்சியில். எனினும், உண்மை வைரங்களை, மக்கள் மன்றம் மறக்கவில்லை.

அதன் எடுத்துக் காட்டுதான் நவ 13-ந் தேதி சென்னையில் கலைவாணருக்கு அளிக்கப்பட்ட பாராட்டும், பொன்னுடைபோர்த்துதலும்.

கலைவாணர்! நகைச்சுவை அரசர்! —என்றாலே போதும், சிறு குழந்தை முதல், அறியும், தெளிவாக; ஓடிவரும், மகிழ்ந்து பாராட்ட. அத்தகைய நிரந்தர இடத்தைப் பெற்றுவிட்டார் நமது என். எஸ். கிருஷ்ணன் அவர்கள்

கலையுலகில், அவருடைய 'சகாப்தம்' ஒரு புதுமையை உண்டுபண்ணியதாகும்! கோமாளித்தனமும், கூத்தாடுதலுமே நகைச்சுவையென்று கருதப்பட்ட காலத்தில் நல்ல கருத்துக்களை சிரிக்கச்செய்த வண்ணமே, மக்களிடையில் புகுத்திய முதற் பெருமை கலைவாணர் அவர்களுக்கே உண்டு! கிட்டத்தட்ட 102-க்கு மேற்பட்ட திரைப் படங்களில், அவர் நடித்திருக்கிறார் —அதன் மூலம் அவர் திரட்டிய புகழும் பெருமையும்தான் இன்று அவரிடம் இருக்கிறது! கிடைத்த பணத்தைக்கொண்டு தன்னுடைய தோழர்களை, துயர்ப்படுவோரின் கண்ணீரைத் துடைத்தலைப் பெரிதெனக் கருதி, தனது வருவாயின் பெரும் பகுதியைச் செலவழித்திருக்கிறார். அவரால், பயன்பெற்ற கல்வி நிலையங்களும், மாணவர் தொகையும், நடிகர்தம் குடும்பங்களும், நல்லறப் பணிகளும் ஏராளம்! ஏராளம்!!

கலையரசர், அவர்! அதனால் தான் இந்நாட்டு வன்கணாளர்களின் ஒருதலைப் பட்சமான போக்கும், இருட்டடிப்பும், அவரை அணுக



முடியவில்லை; மாறாக, அவைகளையும் மீறி, மக்கள் மனதில் மாறாத இடம் பெற்றுத் திகழ்கிறார். அப்படிப்பட்ட ஒரு பெரியவரை, நல்லவரை, கொடையாளரை பாராட்ட வேண்டுமெனும் பண்புடன் பணியாற்றிய தென்னிந்திய நடிகர் சங்கத்தினரை மனமாரப் பாராட்டுகிறோம்.

தமிழ்ப் பேராசிரியர் ரா. பி. சேது அவர்களின் தலைமையிலே, திருச்சி லோகநாதன் தமிழ்த்தாய் வணக்கம் பாட, தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவர் டி. வி. சுந்தரம், யாவரையும் வரவேற்க, நடிகத் தோழர் டி. என். சிவதாணு வரவேற்க, துவக்கப்பட்ட அவ்விழாவில் காலஞ்சென்ற நாடகப் புலவர் து: கா. சங்கரதாஸ் சாமிகளின் உருவப்படத்தை மதுரை இசக்கிமுத்து வாத்தியார் திறந்து வைத்தார். நாடகப் புலவரின் அருந்திறன் குறித்து சிறந்த நாடகமணிகளாகவும், நாடக மேடையின் வாயிலாக இன்று திரைப்பட உலகில் எழுத்தாளராகவும் நடிகர்களாகவும் விளங்கும் தோழர்கள் தஞ்சை ராமையதாஸ், பி. டி. சம்பந்தம், கே. சாரங்கபாணி, டி. கே. சண்முகம், நாடகப் பேராசிரியர் பி. சம்பந்தனார், எம். எஸ், முத்துகிருஷ்ணன் ஆகியோர் பேசினர்.

பிறகு, நமது கலையரசருக்கு பேராசிரியர் சம்பந்தனார், பொன்னுடை போர்த்தினார். நடிகர்கள் மலர்மாரி பொழிந்தனர்! மக்கள் வெள்ளமோ, தனது அன்பு மாரியைச் சொரிந்தது, கைதட்டல் மூலம்! வாழ்த்திதழ்கள்—அன்புக் காணிக்கைகள் யாவும், அளிக்கப்பட்டன. நடிகவேள் எம். ஆர். ராதா பொற்காசுகளும், ஜூபிடர்ஸ் கம்பெனியார் வெண் காசுகளும், இன்னிசை வாணர் எம். கே. தியாகராசபாகவதர் கலைவாணருக்கும் அவர் தம் துணைவியார் மதுரம் அம்மையாருக்குமாக பட்டாடையுமாக பற்பலர் வழங்கினர். நடிகமணி டி. கே. சண்முகம், தனது நாடக சபையினரின் சார்பில் ரூ 4001 ஐ காணிக்கையாக அளித்தார், நடிகர் சங்கத்துக்கு.

விழாவுக்கு வந்திருந்தோர் அனைவருக்கும், புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் நன்றி கூறினார்.

நமது செல்வங்களை, அரசும், அரசினை ஆட்டிப்படைப்போரும், வாழ்த்தி வரவேற்காவிடினும், நாம் மகிழ்ந்து போற்றுவோம்; அந்த வகையில். சங்கம் பணியாற்றுமாக.

கலைவாணர் கிருஷ்ணன் அவர்களும் தோழியர் மதுரம் அம்மையாரும்—பெறற்கரிய பேறு பெற்றவர்கள். அரசியல் வானிலுலவுபவர்களும், ஆராய்ச்சி விண்ணில் வட்டமிடுபவர்களும், கவிஞர்களும், எழுத்து மேதைகளும் பெறுகிற புகழைவிட பெரும்புகழ் பெற்றவர்கள்—மக்கள் மன்றத்தில் அதற்குக் காரணம், அவர் ஒரு சிந்தனை நடிகர், சிறந்த கொடையாளர் என்பதுதான். அவர் வாழ்க! நாடெல்லாம் மகிழ, அவர்கள் பல்லாண்டு வாழ்க! வாழ்க!

★

# “என்ன மாதவம் செய்தோமோ!”

என்ன மாதவம் செய்தோமோ— என்று அகம் உருகத் தெரிவித்திருக்கிறார், அமைச்சர் பக்தவத்சலம்.

கம்பர் விழாவுக்கு 'கனம்' இராசேந்திரர் 'விஜயம்' செய்ய இசைந்தது, அவ்வளவு பூரிப்பைத் தருகிறது. என்ன மாதவம் செய்தோமோ, என்கிறார்!

கம்பனைக் காணீர் — அவன் கவிநயம் உணர்வீர் — தமிழின் மாட்சியினை அறிவீர்—மார் தட்டிக் கூறுவீர், எம்மொழிபோல் இனியொரு இன்பமொழி உண்டோ? — என்று சொல்வதற்காகக் கம்பர் விழா, அமையவில்லை.

கம்பனைப்பற்றிக் கூற, புலவர்கள் போதும் — இதுநாள் வரையிலும், அவர்கள்தான் அவனுக்காக வாதாடிக்கொண்டுமிருந்தவர்கள்., ஆனால், இப்போதெல்லாம், அவனைக் காட்டி அதன்மூலம், நம்மை மிடுக்கோடு பார்க்க எண்ணுகிறார்கள், அமைச்சரின் கட்சியினர்.

பொன்னுக்குப் பாடினான், அவன்! அதனால், தன்னுடைய மனச்சாட்சியை மடக்கிப் போட்டுவிட்டு அப்போது வளர்ந்துவந்த வைணவத்துக்குப் பெருமை தர முயற்சித்தோரின் பின்னால் சென்றான்—பெரிய காவியம் பாடினான். காவியம், அழகோடு அமைந்திருக்கலாம்—ஆனால், அதோடு அவன் கலந்தளித்த பொருள் உளதே, அதைத்தான் நாம் அந்த நாள் முதல் கண்டித்து வருகிறோம்.

“கடன்பட்டார் நெஞ்சம்போல கலங்கினான் இலங்கைவேந்தன்”— என்ற வரிகளை இரசிக்க, பக்தவத்சலங்கள் தான் தேவை என்பதல்ல; சராசரி மனிதனும் இரசிக்கத்தான் செய்வான். ஆனால், அவனது கவிதைகள், அந்தளவோடு இல்லாது, இராமனைக் கடவுளாக்கும் திருத்தொண்டினை வேண்டிய அளவுக்குச் செய்தன.

திண்ணைகள்தோறும் கம்ப இராமாயணப் பிரசங்கம்! அதற்குப் பட்டாபிஷேக வைபவம்! கம்பனுக்கு ஆராதனைகள்! — இப்படி, காலம் சென்றது. வீட்டுக்கு வீடு கம்ப இராமாயண வசன நூல்களும் — புலவர்களிடம் கம்பன் இராமனை வர்ணிப்பதால் ஏற்படும் போதையும், ஏராளமாயின. இதனால், இராமனுடைய 'வேதம்' கம்ப இராமாயணம் என்று கருதலாயினர். சில பஜனை மடங்களில், இராமர் படத்தோடுகூட, கம்ப இராமாயணத்துக்கும் அர்ச்சனை—அவியல் படைப்பு — எல்லாம் நடைபெறலாயின!

இந்தக் கட்டத்தில்தான், கம்ப இராமாயணத்தின்மீது, அறிவியக்கத்தாரின் கண்கள் விழுந்தன. உரத்துச் சொல்ல ஆரம்பித்தார்கள், “கம்ப இராமாயணம்—ஒரு விரும்பத்தகாதகாதை; இராமனைப் பற்றிய கம்பனின்படப்பிடிப்பு, கண்டிக்கத்தக்கது. அவன் ஒரு சிரஞ்சிவிக் கவிஞன் அல்ல—மொழி பெயர்ப்புக் கவிஞன்,” என்றெல்லாம்.

கம்ப இராமாயணம் எரிக்கப்பட வேண்டும் என்றோம்!

'தமிழ்! தமிழ்!!' என்று கூவிய புலவர் பெருமக்களுக்கு, 'திருக்குறள் இதோ!' எனச் செப்பினோம். குறளுடன் ஒப்பிடும்போது, கம்பன் ஒரு மின்மினிப் பூச்சி!—என்றனர், அறிந்தோர். தான் செய்த காவியத்துக்காகக் கம்பன், கண்டனத்துக்குரியவனானான்!

கண்டனத்துக்குரியகம்பனுக்காக வாதாடப் புறப்பட்ட புலவர்கள், இன்றுவரை, இவனது கவிதை அழகு! மிதிலாபுரியைப் பற்றி வர்ணிக்கும்போது அவன் கவிதைகளில் தென்படும் தமிழகத்தின் மாட்சி! இப்படித்தான், கூறுகிறார்களே ஒழிய; நாம் கூறிடும் அடிப்படைக் கண்டனத்தை மறுக்கவுமில்லை—எதிர்ப்பதுமில்லை.

புலவர்களின் பொருளாகஇருந்த கம்பன், இன்று புவியாள்வோரின் பொருளாகிவிட்டான். புலவர்கள், கவிதையழகுக்காக, கம்பனுடைய வக்கீலாயினர்! இவர்களுக்கோ, அதுகூட அல்ல—அந்தச்சாக்கில் இராமபிரானுடைய பெருமையைக் காப்பாற்ற முற்படுகிறார்கள்!

கம்பனுக்கு விழா எடுக்கும் அடிப்படை நோக்கமே இதுதான்— அதனாலேயே, ஆரிய ஏடுகள்கூட அவ்வளவு விளம்பரம் தருகின்றன! அறிவியக்கக் கருத்துக்கள் வளர்ந்தால் திராவிட இயக்கத்துக்கு செல்வாக்கு ஏற்பட்டுவிடும் என்று கருதும் அமைச்சர் குழாங்களும் பூசாரியாகிறார்கள்!

அதுமட்டும் போதாதென்று இப்போது, கம்பர் விழாவுக்கு இராசேந்திர பிரசாத்தையும் அழைத்து வந்து கலந்துகொள்ளச் செய்திருக்கிறார்கள். பக்தவத்சலம், 'என்ன மாதவம் செய்தோமோ!' என்கிறார்—அவர் வந்தமைக்கு.

வந்த இராசேந்திரர், தமிழில் பாடிய கம்பனின் வரிகளைப் படிக்கத் தெரிந்தவரா? அல்ல! அல்ல!! தமிழை அறியார். கம்பர் விழாவிலும், துளசிதாசைப் பற்றித்தான் அவர் அதிகம் பேசினாரே ஒழிய கம்பனைப்பற்றி அல்ல! எப்படி இயலும், அவரால்? செவிடர்கள் ஊரில் ஊமையன் பேசினால் எப்படியிருக்கும்! அப்படியாயிற்று, கதை! ஆனால் அமைச்சர், என்ன மாதவம் செய்தோமோ, என்கிறார். இப்படி பராக்குக் கூறுவதால், பலன் பெறக்கூடும் பக்தவத்சலம்! ஆனால், தமிழுக்கு என்ன நன்மை ஏற்படப்போகிறது?

விழாவில், காமராஜரும் கலந்துகொண்டாராம் —திறவாத வாய் திறந்தும் சிலபல செப்பினாராம், அத்திருவாசகங்களில் ஒன்று. “கம்ப இராமாயணத்தை முன்பெல்லாம், திண்ணைகளில் காலட்சேபம் செய்வார்கள். அப்படிச் செய்ய வேண்டும். இதற்கான எல்லா உதவிகளையும் செய்யவேண்டும்.”

தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்யவேண்டும் என்றார் பாரதியார்! காமராஜர்! தமிழ் முழக்கமல்ல இராமாயணமுழக்கம திண்ணையெல்லாம் கேட்கவேண்டும் என்கிறார்! அப்போதுதான், பக்தி பெருகுமாம் — பகவானின் நாமத்தின் அருமை அதிகமாகும். கம்பனுக்கு விழாவெடுக்கும் அனைவரும் இந்த ஒரு காரணத்துக்காகத்தான் இவ்வளவு விமரிசையாக விழா எடுக்கிறார்கள். திண்ணைகள் தோறும், இராமநாமம்

கேட்கவேண்டும்—அதுதான் முக்கியமே ஒழிய, கம்பனல்ல! கம்பனின் அருமைகளை அறியச் செய்ய வேண்டுமானால், புலவர்கள் போதும் — அமைச்சர்கள் தேவையில்லை. கம்பனின் கவிதைகளை சகல மக்களும் அறியும் வாய்ப்பும், அதே சமயத்தில் வால்மீகியின் கருத்துக்களை ஆராய்ந்து கூறுவதைக்கேட்கும்பண்பும் அமைச்சர்களுக்கு உண்டாகி அதற்காக ஏதாவது வழிவகைகளைச் செய்ய உதவினால்போதும் அமைச்சர்கள். அதற்கென்று கம்ப இராமாயணத்தை அறியாத—வால்மீகி இராமாயணத்தை விரும்பாத இராசேந்திரபிரசாத் வரவேண்டிய அவசியமில்லை!

கம்பனின் தமிழ் நயத்தைவிட, கம்ப இராமாயணக் கதையைப் பரப்புவதில் தான் இந்தப்பழைமை விரும்பிகளுக்குஆர்வம்இருக்கிறது அப்படிப்பரவுவது, வளரும்நமக்குத் தரப்படும் பதில் என்று கருதுகிறார்கள்! அதனாலேயே, காங்கிரஸ்காரர்களும் கூடிக் கூத்தாடுகிறார்கள்! உள்ளத்திலிருப்பதை, வெளிப்படையாகச் சொல்ல அஞ்சுபவர்—காமராஜர், இந்த அச்சத்தின் காரணமே எதைப்பற்றியும் அவர் பேசுவதில்லை; மவுனியாகவேயிருக்கிறார். பேச ஆரம்பித்தால், உண்மை வெளிப்பட்டுவிடுமே! அந்தப் பொதுவிதிக்கு மாறாக கம்பர் விழாவில் சில வார்த்தைகளைப் பேசியிருக்கிறார்—அதனால் ஒரு உண்மை வந்திருக்கிறது. ஊர்கள் தோறும் கம்பராமாயண காலட்சேபங்கள் நடக்கவேண்டுமாம்! கவிதைகளைப் படித்து அதன் நயம், இனிமை, அரும் பொருள், கருப் பொருள் ஆகியவைகளை அல்ல விளக்கவேண்டுமெனக் காமராஜர் சொல்வது; காலட்சேபங்கள் செய்யவேண்டுமாம்! காலேட்சபங்களில் என்ன இருக்கும்? பதித பாவன சீதாராம்! ரகுபதிராகவ ராஜாராம் தானே!!

காவியத்தின் பெயரால், கடவுள் பட்டியலை அதிகப்படுத்தினான் கம்பன் — அதே பணியை, தொடர்ந்து செய்ய ஆசைப்படுவதாலேயே, இவர்கள் அந்தக் கம்பனுக்கு விழாக் கொண்டாடுகிறார்கள். இவர்களால், எப்படித்தான் தமிழ்வளருமோ! இப்படிப் பட்டோரிடம் சிக்க, தமிழும் நாமும் என்ன 'மாபாதகம் தான் செய்தோமோ!'' ★

# பாராட்டுகிறோம்

சென்னை நகராட்சி மன்றத்தையும், கோவை நகர மன்றத்தையும் மனமாரப் பாராட்டுகிறோம்.

இரண்டிடங்களிலும் அதிகாரத்திலமரும் வாய்ப்புப் பெற்றோர், தேசீயக் கட்சியினர்; என்றாலும், ஒருமித்த கருத்துடன் தமிழ் மொழியின் மானத்தைக் காக்க முன்வந்தமைக்காக மனமுவந்து பாராட்டுகிறோம்.

இரஷ்யத் தலைவர்கள் புல்கானினுக்கும், க்ருஷ்செவுக்கும் அளிக்கப்படும் வரவேற்புகள் "இந்தியில்" இருக்கவேண்டுமென, டில்லிபீடம், தாக்கீது அனுப்பிற்று.

'தலைசாய்த்துவிடுவார்களோ' என்றே அஞ்சினோம். மேயர் சிதம்பரம், விடைபெறுகிற நேரத்தில் தமிழின் மானம் காக்க எடுத்துக் கொண்ட முயற்சி உண்மையிலே மன மகிழ்ச்சியைத் தருகிறது.

"வரும் விருந்தினர்களுக்கு வரவேற்பு அளிக்கவும்" என்று தாக்கீது அனுப்புவதே, அநாகரிகமான செயல்! அவ்வளவு தாரம் பண்பற்றவர்களல்ல, தமிழ் மாநிலத்தவர்கள்!

அப்படி "தாக்கீது" அனுப்புதல் கூட, டில்லி பீடம் சொல்லிவரும், "பிற மாகாண அரச விவகாரங்களில் தலையிடமாட்டோம்" எனும் கூற்றுக்கு, பொருந்தாதது ஆகும். எனினும், அனுப்பினர்! ஏன் அனுப்பினர் என்று யோசிக்கும் போதுதான், விஷயம் விளங்குகிறது — இந்தியில் வரவேற்பு அளிக்கவேண்டுமாம்! அதை வலியுறுத்தவே, இப்படியொரு தாக்கீது.

இங்கே வந்த இராசேந்திரர், பன்னிப் பன்னி எடுத்துச் சொன்னார், "தென்னாட்டினர்மீது இந்தியைத் திணிக்கும் நோக்கமே எங்களுக்குக் கிடையாது" என்பதாக.

அவர், குடியரசுத் தலைவர்! அவருடைய வார்த்தைகள், உலரவில்லை. அதற்குள் இப்படியோர் உத்தரவு!

ராசேந்திரர் மட்டுமல்ல, நேரு பண்டிதர், இந்தி குறித்து தந்து வரும் உறுதிமொழிகள் அமோகம். இருந்தும், இப்படியொரு உத்தரவு. இந்தியில் வரவேற்பளிக்கவேண்டுமாம்,

தாக்கீது கண்டதும், நம்மைப் போலவே, நகராட்சி மன்றத்தினரும் நகைத்திருப்பார்களென நம்புகிறோம். கதர்ச்சட்டை போட்டிருந்தாலும், காரிய சாத்தியமற்ற செயலைச் செய்ய உத்தரவிடுகிறதென்றால், விந்தையாகத்தானே இருக்கும்?

இந்தியில், வரவேற்பாம்! டில்லியில் அளித்திருக்கின்றனர்; நியாயம். ஆனால், அதே இந்தியிலேயே, இந்த உபகண்ட முழுமையும் வரவேற்புகள் அளிக்கப்படவேண்டுமென்று 'தாக்கீது' அனுப்ப, எவ்வளவு தைரியம் இருக்கவேண்டும், டில்லிபீடத்துக்கு?

"புல்கானினே, பாரும்! க்ருஷ்சேவே காணும்! இமயமுதல் குமரி வரை, எமது இந்தி மொழி கோலோச்சுகிறது" என்று காட்டிக்கொள்ளும் ஆசை தவிர வேறென்ன? ரஷ்ய விருந்தினர்கள் திரும்பிச் சென்றதும் மாஸ்கோ மாளிகையிலே தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புகளை மாட்டுகின்றனர் என வைத்துக்கொள்ளுவோம். சகலமும் இந்திமயமாயிருக்க வேண்டுமே தவிர, தமிழ் அங்கே ஒளிவீசக் கூடாது! எவராயினும் கேட்டால், 'அது, தமிழ்' என்று பதிலளிக்கும் நிலைமை ஏற்படக் கூடாது — எனும் சிறுமதி தவிர, வேறென்ன இத்தாக்கீதின் பொருள்!

குனியக் குனியக் குட்டிடும், வடநாட்டவருக்கு, அளிக்கப்பட்ட நல்ல பதில் என்போம் சென்னையும் கோவையும் செய்த தீர்மானங்கள்.

நேருவின் 'நெற்றிக் கண்' என்ன செய்யுமோ, அடுத்த தேர்தலுக்கு 'சான்சு' தராமற்போய்விடுமோ!— என்று அஞ்சும் காமராஜர் ஆட்சியைப்போல, தாக்கீது கண்டும் 'மவுனமாக' இராது, தமிழில்தான் வரவேற்பளிப்போம் என முடிவு செய்தது, காலத்தில் செய்த காரியமாகும்.

இது, தேசியக் கட்சியிலிருக்கும் தமிழர்களும், தாய்மொழிக்கு ஊறு நேரிடின் சகியார்! என்பதற்கோர், எடுத்துக்காட்டாகும். இந்த முடிவுகளைச்செய்த இரு நகர மன்றத்தினருக்கும் நம்முடைய வாழ்த்தும், நன்றியும். ★

2-ம் பக்கத் தொடர்ச்சி

குக் கட்டுப்பட்டே நடக்கவேண்டும் என்று திட்டம் செய்தனர். அதுவே, நடைபெற்று வருகிறது. புதுயுகத்தில் எத்தனையோ விதமான எண்ணப் புரட்சிகள் ஏற்பட்டும் இன்னும் அம்முறையை விடவில்லை அவர்கள்.

லூயியின் தலையைப் பதம்பார்த்த பிரான்சிலே, மன்னனுக்குப் பிறகு ஒரு மக்கள் தலைவன் கிளம்பினன். மன்னனையே வணங்கி வணங்கிப் பழக்கம்பெற்ற பிரெஞ்சு நாட்டு மக்கள் அந்தத் தலைவனை 'பூஜா மாடத்துக்குரிய' பொருள் ஆக்குமளவுக்குச் சென்றனர். அதனுல், அவன் இட்டதே சட்டமாயிற்று, அங்கு. மன்னன் ஒழிந்தபிறகு அவனளவுக்கு சர்வாதிகாரியாக உருவானுன் நெபோலியன்! ஜெர்மனியிலும், மன்னன் கெய்சருக்கில்லாத அளவுக்கு செல்வாக்குடன் வளர்ந்தான் ஹிட்லர் — உலகமே அஞ்சக்கூடிய அளவுக்கு சர்வாதிகாரியானுன்! அவனுக்குத் தோழனுகயிருந்து கடைசியில் குண்டுமாரிகளால் துளைக்கப்பட்ட முசோலினியும், முதலில் மக்கள் தலைவன் என்றே போற்றப்பட்டான். பிறகு "மக்களைவிட, சர்க்கார்தான் முக்கியம். அந்த சர்க்கார் பல முள்ளதாகயிருக்க மக்களை எப்படி வேண்டுமானுலும், சித்திரவதை செய்யலாம்" என்கிற அளவுக்கும், அவனே சென்ருன்.

மணிமுடிகளை ஒழித்தாலும் பூஜா உணர்ச்சியினின்றும் விடுபடாத காரணத்தால் ஜெர்மனியும் பிறவும் தமக்குக் கிடைத்த தலைவனை, கடவுளுக்கு அடுத்த படியில் வைத்து வணங்கலாயின. மன்னனின் அட்டகாசங்கள் ஒழிந்த பிரான்சில், மாபெரும் வீரனுக நெபோலியன் பவனிவர ஆரம்பித்தது கண்டு பிரான்சே அவனது காலடிகளில் பணியலாயிற்று. இதே கதிக்குத்தான் ஆளாயிற்று, கரிபால்டியும் மாஜினியும் பாடுபட்டு உருவாக்கிய இத்தாலி. ஜெர்மனி, ஹிட்லர் விரலால் இட்டதைத் தலையால் செய்யத் தயாராயிருந்தது.

*

இவர்கள் எல்லாம் மன்னராட்சியில் அவதிப்பட்ட மக்களுக்கு நிவாரணம் செய்யாமலில்லை— முசோலினியின் காலத்தில் இத்தாலியின் கழனிகள், வளம் பெற்றன! குடியானவர்களுக்கான — அணைகளும், நீர்ப்பாசனங்களும் அமோகமாகச் செய்துதரப்பட்டன! ஹிட்லர், மானமிழந்துபோன ஜெர்மனியை — முதலாம் போரின் காரணமாக உருவற்று, இயந்திரச் சாலைகள் சிதைக்கப்பட்டு தொழிலாளர்கள் பஞ்சைக் கூடுகளாக்கப் பட்டுக்கிடந்த ஜெர்மனியை—புதுப்பித்தான்! ஆலைகளையும், தொழிற்சாலைகளையும் ஏராளமாக நிறுவினுன்—ஹிட்லர்!!

என்ருலும், மணிமகுடங்களை ஒழித்து எந்தப் பிரச்னைக்கு முடிவு காண வேண்டுமென்று பிரான்சு முயன்றதோ, ஜெர்மனி விரும்பிற்ருே, இத்தாலி ஆசைப்பட்டதோ, அவைகள் மட்டும் நிறைவேறவில்லை. முடியாட்சியை ஒழித்து] குடியாட்சியை நிறுவுவதில், ரஷ்யாமட்டுமே வெற்றி கண்டது.

வேறெந்த நாட்டுக்கும் வாய்க்காத பெருமை ரஷ்யாவுக்கு மட்டும் எப்படி கிடைத்தது எனில், அவர்களுக்கு வாய்த்த லெனின் போன்ற தலைவர்கள்தான். லெனினும், ஏனைய சர்வாதிகாரிகள் பாதையிலே சென்றிருந்தால் அவரைக் கட்டுப்படுத்த யாராலும் முடிந்திருக்காது — எனினும் அந்த மாவீரன், மார்க்சு வழங்கிய கொள்கைகளை மனதிலே நிறுத்தி, கட்டுக்கோப்பு நிறைந்த கட்சியையும், அரசையும் நிறுவினுன்! அந்த அரசின் அடிப்படைகள், மக்களின் நன்மைகளையே குறிக்கோளாகக் கொண்டு அமைந்தன.

ஒருவனின் தேவைக்கே ஒரு தேசம்!— எனும் நிலை, ரஷ்யாவில், ஏற்படவில்லை. பிற நாடுகளில், உண்டாயிற்று. ஜெர்மனியின் காலடிகளில் அகில உலகத்தையும் கிடத்துவேன் என்ருன், ஹிட்லர்! 'ஆகா, அடுத்த ஜூலியஸ்சீசர் — நான் தான்,'' என்று ஆர்ப்பரித்தான் நெப்போலியன்! —அவர்களைப் போல இல்லாது, தாம் பெற்ற புது ஆட்சி, மக்களுக்காக அமைய வேண்டும்—மக்களின் அடிப்படைப் பிரச்னைகளைத் தீர்க்க பணியாற்ற வேண்டும், எனும் ஆர்வத்துடன் புது ரஷ்யா உதயமாகலாயிற்று. அதனுல்தான் இன்று அது கம்பீரமாக உருப்பெற்று விளங்குகிறது.

*

பன்னெடுங் காலமாக அடிமைப் பட்டுக் கிடக்கும் மக்கள், விலங்குகளை அறுத்தெறிந்து விடுதலை பெற வேட்கை கொள்வது இயற்கை. அதிலும் கொடுங்கோலுக்கு இரையான குடிமக்கள், கொடுமையாளரின் சிரம் அறுத்து, புது ஆட்சியை மலரச் செய்ய, தியாகங்கள் பலவும் புரியச் சித்தமாயிருப்பர். தியாகத் திற்குப் பிறகு உருவாகும் விடுதலை புரியைச் செப்பனிடவாய்க்கும் தலைவன் வசமே, அந்தப் புது யுகத்தின் தாழ்வும் வாழ்வும் இருக்கிறது. விடுதலை வீரனுக வளர்ந்து, மக்கள் தலைவனுக உருப்பெற்றவன், மக்கள் மன்றத்தில், தான் பெற்ற, செல்வத்தைக்கொண்டு சர்வாதிகாரியாகவும் ஆகலாம்— சாதாரணத் தலைவனுகவும் இருக்கலாம். வரலாறு, இப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் பலரை, சர்வாதிகாரிகளாக்கியது — என்றே தெரிவிக்கிறது.

ஆண்டாண்டு காலமாக 'பூஜா உணர்ச்'சிக்கும், அரசன் தெய்வத்துக்கும் அடுத்த இடத்திலிருப்பவன் என்ற கருத்துக்கும் அடிமைப்பட்டுக்கிடந்த மக்களிடையில் மந்தைச் சுபாவம்' உடனே போய் விட முடியாது.

"அரசன் அமர்ந்த இடத்தில் அமர்ந்திருப்பவர் யார் தெரியுமா? எங்கள் தலைவர்!''

"அரசனுல்தான் ஆட்சி நடத்த முடியும் என்றனரே—எங்கள் தலைவர், இப்போது, எப்படி ஆட்சி புரிகிருர், பார்த்தாயா?''

இப்படி, மக்கள் மன்றம் மன மகிழும்! மக்கள் தலைவன், தனக்குக் கிடைக்கும் மதிப்பையும் மரியாதையையுங்கொண்டு தாயகத்தைத் தளிர்மலைச் சோலையாக்க பாடுபடலாம்—ஒரு சிலர் அதைக் கொண்டு அதிகார வேட்டையாடவும் முனையலாம். ஹிட்லரும், முசோலினியும், அதிகார வேட்டையாடியவர்களே.

ஒரு தலைவனையே, மக்கள் நம்பிக் கொண்டிருப்பதும், அவனுலேயே சகல காரியங்களும் நடந்துவருகின்றன என்று எண்ணுவதும், அவனை விட்டால் யாரால் முடியும் என்று திகில் கொள்வதும், மக்களரசுக்குத் தீங்கு பயப்பதாகும். இப்படிப்பட்ட நம்பிக்கைதான் முன்னராதிக்கத்தை ஒழித்த

பிரான்சிலும், ஜெர்மனியிலும், உண்டாயிற்று. மக்களிடம், நம்பிக்கை வேர்விட்டது — மக்கள் தலைவனும் அந்த நம்பிக்கையைத் தன்னுடைய வளர்ச்சிக்குப் பயன் படுத்திக்கொண்டான்.

* * *

இந்தியா, மன்னருடைய ஆதிக்கத்தை வீழ்த்தி விடுதலைபெற்ற நாடல்ல; என்றாலும் அதே அளவு கொடுங்கோலாட்சி என்று கருதப்பட்ட அந்நியராதிக்கத்தை விரட்டி, சுதந்திரம் பெற்ற பூமி யாகும். இங்கு வளர்ந்துள்ள மக்கள் தலைவர் நேருபண்டிதராவார். அவருடைய நிலை என்ன என்பதை ஆலோசிக்கும்போது அரசியலறிந்தோரிடம் அச்சம் ஏற்படவே செய்யும்.

ஆண்டுகள் எட்டாகிவிட்டன — ஆங்கிலாதிக்கமிருந்தபோது இந்தியாவின் செல்வாக்கு அடங்கியிருந்ததென்றும் இப்போது வானளாவ உயர்ந்திருப்பதாகவும் பேசப்படுகிறதே ஒழிய, உருவாகியிருக்கும் நன்மைகள் தெரியவில்லை. ஜாரை ஒழித்த ரஷ்யா, இந்த எட்டாண்டுக் காலத்தில் செய்து முடித்த திட்டங்களோடு நேருவின் சாதனையை ஒப்பிட்டால், நேரு மேருமலையாக வளரவே இந்த எட்டாண்டுகளும் பயன்பட்டனவே யொழிய, இந்தியா வளர அல்ல என்பது விளங்கும்.

பரம்பரையான 'பூஜா உணர்ச்சி'யின் காரணமாக நேருவை பலபடப் போற்றுகிறார்கள். போற்றக் கூடாது என்பதல்ல; அவசியம் ஒரு விடுதலை வீரனை வாழ்த்தவேண்டியதுதான். வாழ்த்திவிட்டு, அடுத்த நிமிடமே நாடு வாழும் நற்பணிகளில் ஈடுபடவேண்டும். ஆனால், எட்டாண்டுகளாக நேருவின் புகழ் பாடுவதும், "எல்லாக் காரியமும் சரியாகிவிடும். ஏனெனில் நேரு பார்த்துக்கொள்வார்" என்று பேசுவதுமே தேசிய நண்பர்களுடைய போக்காகிவிட்டது.

சிறு தேர்தலுக்குக்கூட நேரு பண்டிதரின் படத்தைக் காட்டியே ஓட்டு வேட்டையாடும் நிலைமைக்கு நாடு சென்றிருக்கிறது.

இப்படி அவரைப் போற்றுவது ஒன்றைமட்டுமே காங்கிரஸ்காரர்கள் செய்துவருவதை வெகு காரசாரமாகக் கண்டித்துள்ளார், ஒருவர். "இப்போதுதான் என்ன வாழ்கிறது? எதற்கெடுத்தாலும் மந்திய பீடத்திலிருக்கும் ஒருவரைத்தானே நம்பிக் கிடக்கிறோம். அவர்வசம்தானே அதிகாரங்களனைத்தையும் கொண்டுபோய்க் குவித்திருக்கிறோம்" —என்று வேதனையுடனேயே கேட்கிறார், அவர்.

மூன்று நான்கு வாரங்களுக்கு முன்பு இதே கருத்தை, ஆச்சாரியார் வெளியிட்டார், 'கல்கி' வாயிலாக—"என்ன வாழ்கிறது? ஒரு பிரதமர் நேருவும், பிளானிங் கமிஷனும்தானே இந்தியாவை ஆள்கிறது!" என்று. ஆச்சாரியார், அஞ்ஞாதவாச நிலையில் இருப்பதால், இவ்வண்ணம் ஆத்திரத்துடன் வெளியிட்டுள்ளார் எனக் கூறக்கூடும். இவர், அப்படிப்பட்டவரல்ல. அரச பதவிகளுக்குச் சற்றும் ஆசை கொள்ளாதவர் — காந்தியடிகளால் மிகவும் விரும்பப்பட்டவர் — அவர் விட்டுப்போன சாத்வீக முறையை அனுசரித்து வாழ்வதாக நேரு பண்டிதராலேயே போற்றப்படுபவர்— பூதானம் கேட்டு நாடு முழுமையும் வலம் வருபவர்— தவயோகி, உத்தமர், சுத்தசன்மார்க்கர்! என்றெல்லாம் போற்றப்படும் ஆச்சாரிய விநோபாபாவே, கடந்த 5ந்தேதி விசாகையில் நடைபெற்ற கூட்டமொன்றில், இவ்வண்ணம் வெளியிட்டிருக்கிறார்.

**சட்டசபைகளிருக்கின்றனவே ஒழிய, அவைகளின் கருத்தறிந்து எதுவும் நடப்பதில்லையாம்.**

**பிரதம மந்திரி ஒரு முடிவைச் செய்துவிட்டு, அதை ஏற்குமாறு எல்லோருக்கும் தாக்கீது பிறப்பிக்கிறாராம்.**

**மக்களின் ஆட்சி, எங்கே நடைபெறுகிறது—என்றுகூடக் கேட்கிறார்.**

**எல்லா அதிகாரங்களும் ஒருவர்வசமே கொண்டுபோய்க் கொட்டப்படுகிறதாம்.**

சாது அவர்; அவரே, இந்தளவுக்குப் பேசியுள்ளாரென்றால், எட்டு ஆண்டுச் சுயராஜ்ய ஆட்சியில் நாம் பெற்றிருக்கும் நிலை என்ன என்பதை உணரமுடியும்.

எட்டாண்டுகள், என்ன செய்தீர்—கேளுங்கள், தேசிய நண்பர்களை. "பாராய், அதோ அணை—இதோ தொழிற்சாலை—முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடியப்போகிறது" என்று சொல்லி வாயை அடைப்பார்கள். ஹிட்லரும் முசோலினியும்கூட மக்களின் மனதைக் கவர, இதைவிடப் பல நன்மைகளை நாட்டிற்குச் செய்யத் தவறவில்லை—அதேசமயத்தில், இந்த நன்மைகளைச் செய்தது யார் தெரியுமா? நான்! ஆகவே, என் சொல்லே சட்டம்; இட்டதே கட்டளை என்று மிரட்ட ஆரம்பிக்காமலுமில்லை.

அந்தக் கட்டம் ஏற்படுமோ என்று அஞ்சுகிறார், விநோபா — தெளிவாகவே தெரிவிக்கிறார். "மக்களுடைய ஆட்சியல்ல நடைபெறுவது" என்று.

அதிகாரத்தை ஒரே இடத்தில் கொண்டுபோய்க் குவிப்பது ஆபத்து என்பார்கள் அறிஞர்கள். பேசியுள்ளார், விநோபா—நேரு பண்டிதர்வசமே யாவும் குவிக்கப்படுகிறதாம்.

"அகில உலகப் பிரச்னையா? நேரு பண்டிதர் என்ன சொல்லுகிறார்..."

"பீர்மேடு, தேவிகுளமா — நேருவின் கட்டளை என்ன?"

"ஆச்சாரியாருக்குப் பதில் காமராஜை முதலமைச்சர் ஆக்கலாமா? அவர் அபிப்ராயம் என்னவோ?"

"காங்கிரஸ் மாநாடு நடத்துவது எப்படி? நேருஜீயைப் போய்க் கலந்தாலோசிப்போம்"

இப்படி எதற்கெடுத்தாலும் நேரு! எதானாலும் நேரு! — இதுதான் எட்டாண்டுகளில் வளர்ந்திருக்கும் நிலைமை.

இதனால், நேரு ஒருவர் பெரியவராகியிருக்கிறாரே ஒழிய, அவர் வார்த்தைக்கு இமயமலை அளவுக்குக் காங்கிரஸ் கட்சியிலும் நாட்டி


★ சிறந்த கட்டுரைகள்

★ அரிய கதைகள்

★ வரலாற்று ஓவியங்கள்

ஆகியவைகளோடு

எண்ணம் களிக்க!

வண்ணம் மிளிர!!

சிறந்த முறையில் ★ சிந்தனை விருந்தாக

'திராவிட நாடு'

பொங்கல் மலர்

உருவாகிறது.

லும் செல்வாக்கு உண்டாகியிருக்கிறதே ஒழிய, ஏற்பட்ட நன்மைகள் என்ன? — அதைத்தான் வேதனையுடன் கேட்கிறார், வினோபா.

*

தனக்குக் கிடைத்திருக்கும் இவ்வளவு அபரிமிதமான செல்வாக்கைக்கொண்டு நேரு பண்டிதர், லெனின் பாதையிலே சென்றிருக்கலாம் — பொதுவுடைமைத் தத்துவங்களை மனதில் வைத்து அமுல் நடத்த முயற்சித்திருக்கலாம். ஆனால், செய்யவில்லை, அவர். தன்னுடைய புகழை — செல்வாக்கை — மிகப் பெரிதாக்கிக்கொண்டிருக்கிறார்.

அவருடைய சொல், இன்று வேதமந்திரம்; மறுப்பாரில்லை.

அவர், நினைத்ததைச் சாதிக்க முடியும். அதனால்தான், எல்லாத் தலைவர்களும்கூட அவரைக் கண்டு மிரளுகிறார்கள்.

அதனால், நாட்டுக்குக் கிடைத்த பயன் என்ன?

தலைப்பில் சொன்ன கதைதான், கவனத்துக்கு வருகிறது. இந்தளவுக்கு நேரு பண்டிதர் வளர்ந்திருப்பதாலேயே, அவருடைய செயல்களைப்பற்றிக் குறை சொல்லவோ, விமர்சிக்கவோகூட ஆளில்லை, காங்கிரஸ் கூடாரத்தில்.

நாட்டின் நாடிகளாயிருக்கும் அறிஞர்களோ, அஞ்சுகிறார்கள் — அவரைக் குறை கூறினால், நம் வாக்கு ஏறுமோ! மக்கள் ஒப்புவார்களோ! — என்பதாக.

கட்சியிலும், அவரை மிஞ்ச ஆளில்லை. நாட்டிலும், அவர் போக்கினை எடுத்துச் செப்ப முன் வருவோரில்லை.

வினோபா, இந்த விசித்திரம் கண்டுதான் வேதனைப்படுகிறார்.

இந்த அளவுக்கு அவருடைய செல்வாக்கை உயர்த்தியிருக்கிறார்கள் — எல்லோரும். அவர், இந்தச் செல்வாக்கைக்கொண்டு நன்மைகள் மலரப் பாதைகளைச் செய்திருந்தால், நிச்சயம் கவலை ஏற்படாது.

அவரோ, இந்தச் செல்வாக்கைக் கொண்டு தன்னுடைய அரசு செய்யும் தவறுகளைத்தான் மூடி மறைத்து வருகிறார்.

ஆண்டு எட்டில், இதுவரை. வீணாகியிருக்கும் மக்கள் பணம், ஏராளம்.

ஊழல்கள் பட்டியல் மிகப்பெரிது.

ஆலைகள் நிர்மாணம், அணைக்கட்டுத் திட்டம் எதிலும் இலஞ்சம், பணக் கொள்ளை.

அந்நிய தூதுவராலயங்களிலும், தான் தோன்றித்தனம்.

உரபேர மோசடி, ஆயுத மோசடி, நம்பிக்கை மோசம்.

இப்படி எண்ணற்ற ஊழல்கள் ஒவ்வோராண்டும், வெளிவந்த வண்ணமுள்ளன. இவைகளனைத்தையும், "நேருவுக்கு, ஜே," என்று கூறி அடக்கிவிட முடிகிறது, தேசியத் தோழர்களால்.

அரசியல் மட்டுமின்றி நாட்டு வாழ்விலும் நல்லது ஏற்படவில்லை — முதலாளித்துவம் மோகனமாகப் பவனி வருகிறது — ஏழை, வெந்து மடிகிறான் — சமூகத்தின் அடிப்படைப் பிரச்னைகள் அப்படியே இருக்கின்றன. "இதையெல்லாம் எப்போதுமாற்றப் போகிறீர்கள்?" என்றால் உடனே 'நேருவுக்கு ஜே' என்று கூவி, மடக்கிவிடுகிறார்கள்.

கதையில் வந்த மூர்க்கசிம்மன் எது செய்தாலும் சரி, எப்படிச் சொன்னாலும் 'ததாஸ்து!' — என்று மக்கள் இருந்தமாதிரி, இன்றைய தினம் சுயராஜ்ய ஆட்சியும் சென்று கொண்டிருக்கிறது.

இந்தக் கேடுகள், ஆதிக்கத்தை அகற்றிய நாட்டில், எதிர்பார்க்கக் கூடியவையே. ஆனால், அந்தக் கேடுகளைத் தாண்டி, எவன் நாட்டுக்குச் சேவை செய்கிறானோ அவனே உண்மையான மக்கள் தலைவன், அப்படிப்பட்ட மக்கள் தலைவன், திடீரென மறையும் படி நேர்ந்தாலும், அந்த இடத்தை நிரப்புவது சிரமசாத்தியமல்ல — ஏனெனில், லெனின் தன்னைப் பெரிதென மதிக்காமல் நாட்டையே முக்கியம் என்று கருதியதால் ஒரு ஸ்டாலினைத் தயாரித்தளித்தார். ஆனால், நேருவுக்குப்பின் ...... காங்கிரஸ்காரர்களே அஞ்சுகிறார்கள் — கவலைப்படுகிறார்கள்.

இதனால்தான், ஒருவனுக்கே ஒரு தேசம் உண்டெனும் நிலைமை ஒழியவேண்டும் என்பார்கள், விவேகிகள்.

அந்த நிலை வருமோ என்று வினோபாபோன்றோர் அஞ்சுவதாலேயே வெளிப்படையாகவே தெரிவிக்கின்றனர் — ஒரு ஆள் இஷ்டப்படியே எல்லாம் நடக்கிறதே ஒழிய, மக்கள் விருப்பப்படியா ஆட்சி நடைபெறுகிறது? — என்பதாக.

காரமான கேள்விதான்! ஆனால், யாரும் அலட்சியப்படுத்தமுடியாத கேள்வி.

இப்படி 'ஒருவரின் தேவைக்காக' அல்ல, குடியரசு மலரவேண்டுமெனக் குருதி சொரிந்தது. இதை மக்களின் தலைவராக உருவாகிக் கொண்டிருந்தபோது எடுத்துச் சொன்னவர்தான் நேரு பண்டிதர். ஆனால், இன்று மாபெரும் தலைவராக உருப்பெற்றுவிட்டதுமோ, தன்னைத்தான் நினைக்கிறார் — நாட்டையல்ல.

இதனாலேயே, காங்கிரஸ் சாதிக்க வேண்டிய பல காரியங்கள் மூலைக்குப் போய்விட்டன. தேசியத் தோழர்களும் 'நேரு இருக்கும்வரையில் பயமென்ன?' என்று இருக்கிறார்கள்.

நேரு, ஒரு விசித்திரமான சர்வாதிகார உருவாகியிருக்கிறார்.

பூஜா உணர்ச்சிக்கு ஆட்பட்ட மக்களும், அவர் சொல்லெல்லாம் சட்டம் என்று கிடக்கிறார்கள்.

இதைத்தான், வினோபா எச்சரிக்கிறார். ஆச்சாரியாரும், எடுத்துக் காட்ட முன் வருகிறார். நாமும் அன்றுமுதல் சொல்லி வருகிறோம். ★


## திருமண அழைப்பு

27-11-55 காலை 9 மணிக்கு எங்கள் செல்வி மங்கையற்கரசிக்கும், திரு. கொ.அ.ரு. முருகையனார் செல்வன் மு. பழனியப்பனுக்கும், சலகண்டபுரத்தில் நடைபெறும் திருந்திய திருமணத்துக்கு வருகை தந்து வாழ்த்தியருள வேண்டுகிறோம்.

தங்கள்,
ப. கண்ணன்,
சிவகாமி.

'பகுத்தறிவு'
சலகண்டாபுரம்.


காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.